பக்கங்கள் 12 விலை ரூபா 3-00

அண்ணா தயாரிப்புகள்!!!
உங்கள் வீட்டுப் பாவனைக்கேற்ற முறையில் சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டதுமான அண்ணா தயாரிப்புகளை வாங்கி பாவித்துப் பயன் பெறுங்கள்.
மிளகாய்த்தூள், மல்லித்தூள், நற்சீரகத்தூள், பெருஞ்சீரகத்தூள், மஞ்சள் தூள், உழுந்து மா, அரிசி மா, கடலை மா.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள.
அண்ணா கோப்பிக்கடை,
யாழ்ப்பாணம்.
[ ஏ-737 ]

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 சித்திரை 30 ஷவ்வால்பிறை 17 இதழ் 90
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 13-05-1990

மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது
"ஜீவாகாரம்"
உள்ளூர் தானிய வகையிலிருந்து உள்ளூர் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட சிறந்த சத்துணவு
'ஜீவாகாரம்'
அண்ணா
தொழிலகம்,
இணுவில்.
[ ஏ-737 ]

# "இந்தியப் படையின் தாக்குதல்பற்றி சர்வதேச மனித உரிமைகள் சபைக்கு புகார் செய்துள்ளேன்

## மக்களின் சுதந்திரத்திற்காக புலிகள் போராடுவது நியாயமானதே"

### - 'ஈழநாடு'வுக்கு டாக்டர் ஜாக்குலின் பேட்டி -

(நமது நிருபர் எஸ். சுந்தரலிங்கம்)

"இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் இந்திய இராணுவம் அப்பாவி மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களும், படுகொலைகளும் சர்வதேச மனித உரிமைகளை மீறியதாக இருந்தது. வடமராட்சிப் பகுதியில் இது மோசமாக இடம்பெற்றுள்ளது. இவற்றையும் என் கண்முன்னால் நடைபெற்ற பல தாக்குதல்களையும் எமது பிரான்ஸ் 'எம். எச். எவ். நிறுவன தலைமைச் செயலகத்தின் ஊடாக 'சர்வதேச மனித உரிமைகள் சபைக்கு' புகார் செய்துள்ளேன்"

இவ்வாறு மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த இரு வருடங்களாக கடமையாற்றியபின் தனது தாய்நாடான பிரான்ஸ் திரும்பும் டாக்டர் செல்வி ஜாக்குலின் சாட்டனற் 'ஈழநாடு'வுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் எம். எச். எவ். அதிகாரமளிக்கப்பட்ட ஸ்தாபனத்திற்கூடாக டாக்டர் செல்வி ஜாக்குலின் செயற்பட்டுவந்தவர். எமக்கு அளித்த ஐந்து நிமிட பேட்டி இங்கு கேள்வி-பதிலாக தரப்படுகிறது.

கேள்வி: ஸ்ரீலங்கா வந்தபின் ஏற்பட்ட மறக்கமுடியாத போர்க்கால அனுபவங்கள் பற்றி ஏதாவதுகூறமுடியுமா?



பதில்: ஆம்! இந்திய இராணுவ ஆட்சியின்போது ஆக

(12 பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் பேச இலங்கை இணக்கம்

(கொழும்பு)
ஒரு லட்சம் இந்திய வம்சாவளியினரை திருப்பி அனுப்புவது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுக்கள் நடாத்த இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

(12-ம் பக்கம் பார்க்க)

## 800கோடி ரூபா செலவில் தொலைபேசி இணைப்புகள்

[கொழும்பு]
வடக்கு-கிழக்கு மாகாணத்தில், பூரணத்துவம் வாய்ந்த தொலைபேசி வசதிகள் வழங்கும் பாரியதிட்டம் சுமார் 800 கோடி ரூபா செலவில் விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த மூவர் அடங்கிய நிபுணர்குழு தொலைபேசி தொடர்பு தலைமைப் பொறியியலாளர் திரு. ஜான்லங்கா தலைமையில் யாழ்ப்பாணம், திருமலை, வவுனியா, மன்னார்

(12- பக்கம் பார்க்க)

## டாக்டர் ஜாக்குலினுக்கு கௌரவ பிரியாவிடை

(வடமராட்சி)
வடமராட்சிப் பகுதியில் கடந்த இரு வருடங்களாக இடம்பெற்ற போர்க்கால சூழ்நிலையில் அச்சமின்றி மனித நேயத்துடன் தொண்டாற்றிய பிரான்ஸ் டாக்டர் செல்வி ஜாக்குலினுக்கு நேற்று சிறப்புமிக்க பிரியாவிடை

(12ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி. பி.யின் சக்திபற்றி அரசுக்கு மீண்டும் அச்சம்

### - முக்கிய தலைவருடன் பேச்சு

(கொழும்பு)
ஜே. வி. பி. யின் சக்தி பற்றி அரசுக்கு மீண்டும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. இதன் ஒரு கட்டமாக ஜே. வி. பி. தீவிரவாதிகளின் முக்கிய தலைவர் ஒருவருடன் பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இரகசிய பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இத்தகவலை அவர் நேற்று பாடசாலை வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் மீண்டும் அமைதியும், சகஜ நிலையும் ஏற்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு தாமும் ஜே. வி. பி. இயக்கமும் ஆதரவளிப்பதாகவும், சமூக அநீதிகளை ஒழிக்கும் ஜனாதிபதியின் முயற்சிக்கும் தாம் முழு ஆதரவையும் வழங்குவதாயும் அத்

(12-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை ஆணையாளருக்கு மகஜர்

(மன்னார் நிருபர்)
வடக்கு கிழக்கு மாகாண சபையின் விசேட நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலையிலும் நடத்துமாறு பல தொண்டர் நிறுவனங்கள் பரீட்சை ஆணையா

(12ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடத்தப்பட்டு விடுதலை

(கொழும்பு)
பேராதனை பல்கலைக் கழக உதவி விரிவுரையாளர்கள் இருவர் இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் கடத்தப்பட்டு 48 மணி நேரத்தின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

பல்கலைக் கழக 'அக்பர்' மண்டபத்தருகே மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் விரிவுரையாளர்கள்; திரு. சனத் அமரதுங்க, திரு. பி. எல். குணதிலக இருவரும் பலாத்காரமாக ஆயுத

(12 பக்கம் பார்க்க)

## 'றோ'விற்கு எதிராக விரைவில் பிரதமர் சிங் நடவடிக்கை

(புதுடில்லி)
இந்திய புலனாய்வு துறையான 'றோ' வின் தலைமைப் பீட முக்கிய அதிகாரிகளுக்கு எதிராக பிரதமர் திரு. வி.பி. சிங் விரைவில் நடவடிக்கை எடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய முன்னாள் அரசு, விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டிருந்தபகை நடவடிக்கையை தொடர்ந்தும் 'றோ' தற்போது செயற்படுத்தி வருவதுடன் தற்போதைய இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்குமிடையில் மோதல்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டு வருவதாகவும் முதல்வர் திரு. கருணாநிதி கடும் குற்றம் சுமத்தியுள்ளார்.

'றோ' வின் இச்செயற்பாடு

(12ம் பக்கம் பார்க்க)

## இரவு நேர பயணத்திற்கு அதிக கட்டணம்

(கொழும்பு)
இரவுநேர தனியார் போக்குவரத்து பஸ் சேவைக்கு அதிக கட்டணம் அறவிட அரசு அங்கீகாரம் வழங்கவுள்ளது: இது தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளியிடப்பட

(12 ம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேசன் ஜேர்மன் சேர்ப் பட் எயர் சிலோன் இன பூச்சி அகற்றப்பட்ட இரண்டுமாதக் குட்டிகள் (ஆணும் பெண்ணும்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ஜேவியர், 249, பலாலி றோட், கந்தர்மடம். (சி-3846)

ஒரு வருடம் பாவித்த 49 C. C. கொண்ட புத்தகம் புதிய (Brand new) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 204, மானிப்பாய் றோட். ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-3802)

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

### நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

### தேவை

ஸ்ரூடியோவில் வேலை செய்வதற்கு இளைஞர்கள் தேவை. நேரில் வரவும். தரன் ஸ்ரூடியோ. 98, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 23858. (சி 3842)

### முதலாம்பிள்ளை

நோர்வேயின் தமிழ்நாதம் வானொலி நிலையம் நடாத்திய வானொலி நாடகப்போட்டியில் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு வானொலி நாடக நூல்கள்.

1. கெட்டிக்காரர்கள் 25/-
2. முதலாம்பிள்ளை 30/-

19 நாடகங்கள் விற்பனையாகின்றன. (சி-3814)

### சேவை

பெண் அச்சுக்கோப்பாளர் அல்லது பழக விரும்புபவர் தேவை. பெயர், விலாசம், பிறந்த தேதி மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மேர்வின்ஸ். றபர்சீல் தயாரிப்பாளர், 91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; (சி-3682)

### பூசகர் தேவை

ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானத்தின் இருகாலப் பூசைக்கு பிராமணக் குடும்பஸ்தர் உடன் தேவை. வீட்டு வசதி உண்டு. தொடர்பு:- தருமகர்த்தா, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (சி-3826(

### கல்வி

5 — 10 மாணவ மாணவிகளைக் கொண்ட சிறுகுழுக்களாகவோ அல்லது தனிப்பட்டமுறையிலோ ஆங்கிலக் கல்வி கற்க விரும்புபவர்கள் விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய என்வலப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3801 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3801)

### வெளிவந்துவிட்டது

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly by Nagaratnam B.Sc (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பு:- பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன்தரும் அற்புதப் படைப்பு! எந்தத் துறையிலும் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாக கணிப்பீடு செய்ய உதவும்நூல். (ஏ-723)

## A/L 90
## DAY CLASS

இந்துநாகரிகம் : திரு. காரை. செல்வராசா

(மாதம் 60 மணித்தியால வகுப்புகள்)

தினமும் 11 மணி முதல் 1 மணி வரை

குறிப்பு : ★ 14 வருட வினாவிடை வகுப்புகள் இலவசம்

★ முழுப்பாடத் திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

ஆரம்பம்: 14 - 5 - 1990

**ECALOM** (மனோகராச் சந்தி)

(சி-3848)

## ★ இயேசு ஜீவிக்கிறார் ★
### 5 அற்புத மாலைகள் 5

இடம் :
மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானம்

திகதி :
16 - 5 - 1990 — 20 - 5 - 1990
புதன் முதல் — ஞாயிறு முடிய

நேரம் :
தினமும் மாலை 4-00 மணிக்கு

நற்செய்தி :
செ. இராஜேந்திரம்

வியாதியா? சமாதானமில்லையா?
பிசாசின் பிடியா? என்ன பிரச்சனை?
இயேசு இலவச ஆன்மீக விடுதலை தருகிறார்.
வியாதியஸ்தருக்காக ஜெபம் செய்யப்படும்.
எல்லோரையும் அன்பாய் வரவேற்கிறோம்.

(ஏ-741)


# இவ்வாரம் உங்கள் பலன்

இ. மகாதேவா

(13-5-90 — 19-5-90)

**மேடம்:**
தேவையற்ற முயற்சியால் அலைச்சல் ஏற்படும். அன்னிய நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். இனஜனங்களால் வீண்பழி கேட்பீர்கள்.

**இடபம்:**
தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் பாராட்டு இருக்கும். தூரத்துச் செய்திகளால் உங்கள் வருங்காலச் சிறப்புக்களுக்கு வித்திட முயலுவீர்கள்.

**மிதுனம்:**
எந்த விஷயத்திலும் பிணை நிற்கவேண்டாம், பணக்கஷ்டங்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். உடல் களைப்பு ஏற்படும்.

**கடகம்:**
எதிர்பாராத வெற்றிகள் கிடைக்கும். ஆனால் பொருட் செலவுகளும், வீணான அலைச்சலுக்கும் குறைவில்லை தொழில் ஸ்தானத்தில் வீண்வாக்குவாதம் ஏற்படும். இடமாற்றங்களால் சில நன்மைகள் வரும்.

**சிங்கம்:**
கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். உதவிக்குச் சென்று உபத்திரவப்படுவீர்கள். உடல் நிலையில் அசதி ஏற்படும். குடும்பத்தில் வீண் கலகம் ஏற்படும்.

**கன்னி:**
கட்டுமீறிய பொருட் செலவால் கடன்பட நேரிடும் அடுத்துக் கெடுக்கும் நண்பர்களால் வீண் தொல்லைகள் ஏற்படும். பிரையாண மொன்றுக்கு அடிகோலுவீர்கள்.

**துலாம்:**
அயலவர்களாலும் இனஜனங்களாலும் வீண்பழி கேட்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வாகன சுகம் கிடைக்கும். பொதுத் தொண்டில் அதிகளவு ஈடுபாடுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:**
குடும்பத்தில் கலகம் பிறக்கும். பொருள் இழப்புக்கு இடம் உண்டு. அதிக யோசனைகள் ஏற்படும். நண்பர்களுடன் வீண் பிரச்சனைகள், அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். சிறு பிரையாணங்களைத் தவிர்க்கவும்.

**தனுசு-**
நீங்கள் சொல்வாக்கால் செல்வாக்குப் பெறுவீர்கள். பெண்களால் உதவிகள் கிடைக்கும். களவு போக இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் குறைகேட்க நேரிடும். வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்**
மனக் குழப்பங்கள் ஏற்பட்டாலும் காரியங்கள் நிறைவேறும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும். பணவருவாய்கள் ஏற்படும். குடும்பச் செலவு, வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும், விருந்தாளிகள் வரவு ஏற்படும்,

**கும்பம்:**
நீங்கள் நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும், கௌரவப் பிரச்சனை ஏற்படும் உதவி செய்பவர்களால் உபத்திரவங்கள் ஏற்பட்டு மறையும். விஷபீடை அக்கினி பயம் ஏற்படும்.

**மீனம்:**
அயலவர்களுடன் வீண் பிரச்சனைகள் ஏற்படும். தருச் செலவுகளுக்குக் குறையிருக்காது. புதிய இடத்தில் புதிய திட்டங்கள் ஏற்படும், பணவருவாய்கள் ஏற்படும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும்.


## கேள்வி - பதில்

உங்கள் நோய் சம்பந்தமான ஆலோசனைகளைத் தர பிரபல வைத்தியகலாநிதி ''ஈழநாடு'' வாரமலர் மூலம் 20 - 5 - 90 முதல் பதிலளிக்கமுன்வந்துள்ளார். தங்கள் கேள்விகளைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**"வைத்திய ஆலோசனை"**
ஈழநாடு, த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டிக்கிரியை அழைப்பு



தோற்றம்:
16-09-1933
★
மறைவு:
13-04-1990

அமரர்
**சின்னவாசகம் குணபாலசிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (13-05-90 ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளன. மேற்படி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள்
பெருமக்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

''பரமேஸ்வரி பவனம்''
17/2 பிரதான வீதி, சங்கானை.
(சி-3677)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(13—5—1990)



தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை
**அமரர் சி. இராமலிங்கம் அவர்கள்**

ஈழத்திலே முதன்முதலாகத் தமிழிற் சுருக்கெழுத்து முறையை அறிமுகப்படுத்தி ஆயிரக்கணக்கான தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களை உருவாக்கிய அமரர் சி. இராமலிங்கம் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

அன்னாரின் மாணவர்களான
வர்த்தக, ஆசிரியர்கள்.
(சி-3849)

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# நல்லூரை அழியவிடலாமா?

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(தலைவர், வரலாற்றுத்துறை)

தமிழரும் ஈழநாட்டின் ஆதிக்குடிகள் என்பதை இந் நாட்டின் கடந்த இரு சகாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் துலாம்பரப்படுத்தியுள்ளன. வெறும் கட்டுக்கதைகளும் ஐதீகங்களுமே தமிழர் வரலாறு பற்றித் தரும் தகவுகள் என்ற நிலையைத் தொல்லியல் அகழ்வுகள் முற்ருக மாற்றி அமைத்துள்ளன. வரலாற்றுக்காலத்தின் ஈழத்தின் தலைநகராக அநுராதபுரமே விளங்கியது. ஆயிரமாண்டுகட்கு மேலாகச் சிங்கள அரசின் தலைநகராக இது விளங்கியது எனலாம். இதே போன்று வடபகுதியில் இப் பிராந்தியத்தின் தலைநகராகக் கந்தரோடை விளங்கியது. அநுராதபுர அரசின்பின்னர் தோன்றிய பொலநறுவை அரசும் கிட்டத்தட்ட இரண்டரை நூற்ருண்டுகளே நிலைத்து இருந்தது. இப்பொலநறுவை அரசைத் தோற்றுவித்தவர் சோழரே எனலாம். சோழர் காலத்தில் வடபகுதியில் நல்லூர் முக்கியம் பெற்ருலும் பொலநறுவை அரசை அழித்த மாகனேடுதான் வடபிராந்தியத்தில் தனியே இயங்கிய அரசொன்று உதயமானது போற் தோற்றுகிறது.

பொலநறுவை அரசின் வீழ்ச்சியோ சிங்கள அரசிருக்கைககள், பாதுகாப்புக் காரணங்களுக்காக தம்பதேனியா, யாப்பகுவ, குருநாகல் கோட்டை, கண்டி என்ற தலைநகரங்களைத் தேடி அலைய, வடபகுதியில் நல்லூர் இம்முழுக் காலகட்டத்தில் பொலநறுவை அரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் (கி. பி. 1250) போர்த்துக்கேயர் போர் முனையில் அதனைத் தோற்கடிக்கும் வரை (கி. பி. 1619) தமிழ் அரசின் தலைநகராக விளங்கியதும் வரலாறு. கோட்டை மன்னனை 6ஆம் பராக்கிரமபாகுவின் வளர்ப்புப் பிள்ளையாகிய சப்புமால் குமரையன் என்ற கேரள வம்சத்தவன் (தமிழன்) ஆட்சி (கி. பி. 1450 — 1467) 17 வருடம் நிலைத்ததைத் தவிர மிகுதி முழுக்காலப்பகுதியும் தமிழராட்சி நிலைபெற்றிருந்த தலைநகராகவே இது விளங்கியது.

இந் நல்லூர்த் தலைநகரமே சிங்கைநகர், யாழ்ப்பாணப் பட்டினம், யாழ்ப்பாண நாயகன் பட்டினம், யாப்ப பட்டுனம் என அழைக்கப்பட்டது. இத்தலைநகரின் எல்லைகள் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூற முடியாவிட்டாலும்கூட இத்தலைநகரை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதல் மன்னன் இந்நகரின் நான்கு எல்லைகளுக்கும் காவற் தெய்வங்களுக்கு அமைத்த கோயில்கள் பற்றி யாழ்ப்பாண வைபவ மாலையில் வரும் செய்தியைக்கொண்டு இக் கோயில்களின் எல்லைக்குள் இத்தலைநகர் இருந்திருக்கலாம் என யூகிக்கலாம். நல்லூர்க்கந்தன் கோயிலை மையமாகக் கொண்டே இக் கோயில்களும் அமைக்கப்பட்டதுபோற் தெரிகிறது. அன்றைய நல்லூர் முருகன் ஆலயம் இன்றைய புரட்டாஸ்தந்த கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் இருந்ததைப் போர்த்துக்கேயர் டச்சுக்கார ஆவணங்கள் எடுத்தியம்புகின்றன. கிழக்குத் திசையில் வெயிலுகந்தப் பிள்ளையார் கோயிலும், மேற்குத் திசையில் வீரமகாளி அம்மன் கோயிலும் வடதிசைக்குச் சட்டநாதர் ஆலயம், தையல் நாயகி அம்மன் ஆலயம், சாலை விநாயகர் ஆலயம் ஆகியனவும் தெற்குத் திசையில் கையிலைநாதர், கைலை நாயகி கோயில்கள் ஆகியவை அமைந்ததும் வரலாறே. இவ்வாறு தலைநகரின் நான்கு திசைக்கும் காவற் தெய்வங்களுக்குக் கோயில் அமைப்பது மத்திய காலத்தில் ஈழத்தில் நிலவிய வழக்காகும். கோட்டை அரசிலும் இவ்வாறு வேறு பெயர்கள் கொண்ட நாற்திசைக் கோயில்கள் காணப்பட்டன.

யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை, போர்த்துக்கேய டச்சுக்கார ஆவணங்கள் சங்கிலித் தோப்பிலேயே மன்னர் அரண்மனை இருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. தலைநகருக்குப் புனிதத் தன்மை ஏற்படுத்துவதற்காக இந்துக்களின் புனித நதியாகிய யமுனையில் இருந்து புனித நீரை வரவழைத்து இதற்கென அமைக்கப்பட்ட ஏரியில் (தற்கால யமுனரி) இட்டு வைத்ததும் வரலாற்றுச் செய்தியாகும். சோழப் பேரரசன் முதலாம் இராஜேந்திரன் தலைநகருக்கு புனிதத் தன்மை அளிக்க கங்கை நீரை இட்டு வந்த செய்தியைப் போன்ற செய்தியே இஃதாகும். இதனுல் அவனின் தலைநகர் கங்கை கொண்ட சோழ

(10-ம் பக்கம் பார்க்க)

## நமது பார்வையில்...

## மொழி வளர்ச்சிப் பணி

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இந்த நாளில் மொழி புதிய உத்திகளோடும் வளரவேண்டும்.

கணனி, தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றவற்றின் பாவனை அவசியமில்லை என நாம் ஒதுங்கியிருந்துவிட முடியாது.

சுருக்கெழுத்து முறை தமிழில் 1905ல் அறிமுகமானது. பிற்மன் முறையைப் பின்பற்றி தமிழகத்தில் ஓர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1952 முதல் சுருக்கெழுத்து வகுப்புகள் இலங்கை அரசினுல் நடாத்தப்பட்டன. திரு. சி. இராமலிங்கம் இப் பணிக்கென நியமிக்கப்பட்டார்; புதிய முறை ஒன்றையே அறிமுகப்படுத்தினுர்.

1959 முதல் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியிலும் 1974 முதல் சம்மாந்துறை தொழில் நுட்ப நிறுவனத்திலும் சுருக்கெழுத்துப் பயிற்சி தொடர்ந்தது.

தமிழில் நிர்வாகம் சீராக நடைபெற வேண்டுமானுல் சுருக்கெழுத்துப் பெற்றவர்கள் பணியும் அவசியமாகும்.

இந்த வகையில் தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை எனப் போற்றப்படும் சி. இராமலிங்கம் போன்ருேர் பணி மெச்சப்படவேண்டும்.

அவர் நினைவு தினமான இன்று அவர் பணியை நினைவு கூருவதோடு தட்டச்சு, கணனி போன்ற மொழி வளர்ச்சிக்கான தொழில் நுட்பக் கருவிகளின் பாவனைக்கு வேண்டிய ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிருேம்!

---

மருத்துவம்

# விலங்கு விசர் (Rabies)

-வைத்திய கலாநிதி த. சிவராசா-
(மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

(விலங்கு விசருக்கு காரணமாக உள்ளது ஒரு வைரஸ் கிருமி. இதை அழிக்ககூடிய மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே இந்நோய் ஒருவருக்கு ஏற்பட்டால் மரணம் நிச்சயம். ஆதலால் இந்நோய் உண்டாகாது பாதுகாத்துக் கொள்ளுதல் மிகமிக முக்கியம்.)

இந்நோயை பொதுவாக விசர்நாய்கடி நோய் என்று அழைப்பதுண்டு.

விலங்கு விசர் இலங்கையில் ஒரு பாரிய சுகாதார பிரச்சனையாக இருந்துவருகிறது. இலங்கையில் பொதுவாக இந்நோய் உண்டாகும் மனிதரின் தொகை குறைந்து வந்தபோதும் வடகிழக்கு மாகாணத்தில் இந்நோயினுல் பாதிக்கப்படுபவர்களின் தொகை குறைவதாக தெரியவில்லை. இந்நோயை ஒழிப்பதற்கு 1975லும் 1981லும் சுகாதார திணைக்களத்தினுல் எடுக்கப்பட்ட முயற்சிகள், முழுஅளவில் இந்தப் பகுதிகளில் செயல்படுத்தாதது இதற்கு ஒரு முக்கிய காரணமாக கருதவேண்டும்.

தற்போது கிளிநொச்சி பகுதிகளில் அதிகமாக காணப்படும் இந்நோய் மற்றைய பகுதிகளுக்கும் விரைவில் பரவக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. உடனடியாக நோய் தடுப்பு முறைகளை கையாளாவிட்டால் இது கட்டுப்பாடின்றி பரவக்கூடும்.

### நோய்த்தேக்கம்

விலங்குவிசர், காடுகளில் இருக்கும் வௌவால், கீரி, நரி முதலியன மிருகங்களில் காணப்படும்நோய். நோயுள்ள மிருகங்சள் நாய்களையும் கடிப்பதால், இந்நோய் நாய்களுக்கு உண்டாகும். பூனைகளுக்கும் இந்நோய் தொற்றலாம். நோயுற்ற நாய் இன்னொரு நாயை கடிக்கும்பொழுது நோய் பரவுகிறது. நோயுற்ற நாயோ, வனவிலங்கோ மனிதனைக் கடிக்கும் பொழுது மனிதனுக்கு இந்நோய் உண்டாகிறது. நோயுற்ற மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்கு தொற்றுவதற்கான ஆதாரம் எதுவும் கிடையாது.

### நோய்க்காரணி

விலங்கு விசருக்கு காரணமாக உள்ளது ஒரு வைரஸ் கிருமி. இதை அழிக்கக்கூடிய மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே இந்நோய் ஒருவருக்கு உண்டாகினுல், மரணம் நிச்சயம். ஆகவே இந்நோய் உண்டாகாது பாதுகாத்துக் கொள்ளுதல் மிக மிக முக்கியம்.

நோயுற்ற மிருகத்தின் உமிழ்நீரில் இந்நோய் கிருமிகள் உள்ளன. நோயினுல் பாதிக்கப்பட்ட மிருசம் கடிக்கும் பொழுது ஏற்படும் காயத்தினூடாக உமிழ்நீரிலுள்ள கிருமிகள் உடலுக்குள் செல்லும். மிருகங்கள் கடித்த உடன், காயத்தை சவர்க்காரம் போட்டு நன்ருக சமுவ்வதன் மூலம் இக்கிருமிகள் உடலுக்குள் செல்லாது தடுக்கலாம். உடலுக்குள் செல்லும் கிருமி மூளையிலுள்ள நரைநிறப் பொருளை (Grey Mattcr)பாதிக்கும். மிருகம் கடித்து 20—90 நாட்களின் இடைவெளிக்குப் பின் விலங்கு விசரின் அறிகுறிகள் தோன்றலாம். சில சமயங்களில் பல வருடங்களின் பின்னும் நோயின் அறிகுறிகள் வெளிப்படலாம்.

### விலங்கு விசர் ஏற்பட்ட நாய்களில் தோன்றும் அறிகுறிகள்

ஆரம்பத்தில், நாய் பயந்த தன்மையுடையதாக, இருண்ட இடங்களை நாடும். சுலபத்தில் கோபம் கொள்ளும், காரணமின்றி வரண்ட குரலுடன்

### விசர்நாய்கடி நோய்க்கு மருந்து கிடையாது



குரைக்கும்.

அடுத்து, மரத்துண்டு, வைக்கோல் போன்ற ஜீரணிக்க முடியாதபொருட்களை கடித்து உண்பதால் ஆர்வம் காட்டும். எதிர்படும் எதையும் கோபத்துடன் கடிக்கும்.

பின், நாக்கிலிருந்து வைரஸ் கிருமி நிறைந்த உமிழ்நீர் வழிய தெருத்தெருவாக ஓடும். வழியில் கண்டதைக் கடிக்கும்.

இறுதியில், வாய்மூடமுடியாத, உடல் முழுவதும் சோர்வுற்று இறந்துவிடும். அறிகுறிகள் ஆரம்பித்து 2—5 நாட்களில் இறப்பு ஏற்படும்.

சில சமயங்களில், நாய் வாய் மூட முடியாது. உணவுவிழுங்க முடியாது தவிக்கும். பின்னர் கால்கள் சோர்வுற்று இருண்ட இடங்களை நாடிச்செல்லும். 3—4 நாட்களில் இறந்துவிடும். இந்தவகையை 'ஊனம் விலங்கு விசர்' (Dumb Rabies) என்று அழைப்பதுண்டு.

### நாய் கடித்தால் என்ன செய்யவேண்டும்?

கடிக்கும் நாய்களுக்கெல்லாம் விலங்கு விசர் இல்லாமல் இருக்கலாம். ஆனுல் எந்த நாய் கடித்தாலும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

1. கடித்த பாகத்தை (காயம் உட்பட) உடனே சவர்க்காரம் போட்டு 5 நிமிடத்திற்கு ஓடும் நீரில் (தண்ணீர் குழாயின் கீழ் பிடித்து) கழுவவேண்டும்.

சிறிது குருதி ஒழுக்கு ஏற்படுவதை அலட்சியப்படுத்தவும்.

2. சுத்தமான துணியால் நீரை ஒற்றி எடுக்கவேண்டும்.

3. பின்னர், இயலுமானுல் காயத்தை சர்ஜிகல் ஸ்பிரிட் அல்லது டெற்ருேல் தடவி, சுத்தமான துணியால் மூடிக் கட்டி வைத்திகசாலைக்கு அனுப்பவேண்டும்.

4. வைத்தியசாலையில் ஏற்பு தடுப்பூசியும் அவசியமானுல் விலங்கு விசருக்கான தடுப்பு ஊசியும் [A. R. V.) முழுமையாக போய்ப்படல் வேண்டும்.

5. கடித்த நாயை கட்டி வைத்து 10 நாட்களுக்கு அவதானிககவேண்டும். இந்தக் காலத்தில் விலங்குவிசரின் அறிகுறிகள் ஏற்பட்டால் அல்லது நாய் இறந்தால், அந்த நாய்க்கு விலங்கு விசர் என்று முடிவுசெய்யவேண்டும்.

கடித்த நாய் காணுமல் போகுமிடத்தும் மேற்கூறிய பாதுகாப்பு முறைகள் யாவும் பின்பற்றப்படல்வேண்டும்.

### விலங்கு விசர் ஏற்படாது தடுப்பது எப்படி?

விலங்கு விசர் ஏற்பட்டால் அதை மாற்றுவதற்கு மருந்து கிடையாது. ஆகவே இந்த

( 9-ம் பக்கம் பார்க்க)

# மொரிசியசு நாட்டில் இரு வாரங்கள்

ஐ.தி.சம்பந்தன்

மொரிசியசு நாட்டில் மிக வலு வாய்ந்த இயக்கமாக இருந்து வரும் மொரிசியசு கிராமிய இளைஞர் இயக்கம் நாட்டின் பொருளாதார அபி விருத்திக்கு ஆக்கபூர்வமான பணியாற்றி வருகின்றது. 1978ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இவ்வியக்கம் பல்லா

செயற்படுத்துவதற்கு, கிராமிய இளைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவியளித்து உதவுதல்.

நல்ல சுற்றுடல்களை வளர்ப் பதற்கு இளைஞர்களுக்கு விரி வான கல்வியறிவை ஊட்டல்,

பொருளாதார அபிவிருத் திக்கு தடையாக இருக்கும் இளைஞர்களின் சிந்தனைகளை

தேசக் கருத்தரங்கு மண்டபம், வெளிநாட்டுபயணிகள், விசேட பிரதிநிதிகள் தங்கிக் கொள் வதற்கான 100 அறைகளையும் தங்குமிட வசதிகளையும் கொண்ட விடுதிச்சாலை, தொழிற்பயிற்சி நிலையம், விளையாட்டு மைதானம், மற்றும் பல வசதிகள் கொண்ட நிலையம் ஒன்றை

விளங்கும் துறைமுகம் போட் லூயிஸ் ஆகும். நாட்டின் தலை நகராக விளங்கும் அருகே போட் லூயிஸ் அமைந்திருக்கும் துறைமுகம் ஓர் இயற்கைத் துறைமுகமா கும். இந்நாட்டை முதன் முதல் கைப்பற்றிய பிரெஞ்சு நாட்டவர்கள் இத்துறைமுகத் திலேயே வந்து இறங்கினர்.

**(மொரிசியசு நாட்டில் வாழும் தமிழ் மக்க ளிடையே தமிழுணர்வு மிகுந்து காணப்படுவதோடு தமிழ் கலை கலாசாரங்களை கடந்த 260 ஆண்டு களுக்கு மேலாகப் பேணிப்பாதுகாத்து வருகின்றனர் என்று அங்கு சென்றுவந்த திரு. ஐ. தி. சம்பந் தன் கடந்த மூன்று வாரங்களாக விளக்கியிருந்தார். தொடர்ந்து படியுங்கள்.)**

நிர்மாணித்துள்ளது, மொரியசு கிராமிய இளைஞர் இயக் கத்தின் முன்னேற்றம் ஏனைய நாட்டு இளைஞர்களுக்கு முன் மாதிரியாகும்,

### அயராத உழைப்பு

இந்த இயக்கத்தை தலைமை தாங்கி வழிநடத்துபவர் திரு. எ. வைத்திலிங்கம் என்ற ஓர் தமிழன் என்பதை அறியும் போது நாம் பெருமைப்படா

அதன் பின்னர் இந்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட தமிழர் களும் வந்து இறங்கிய துறை முகமும் இதுவேயாகும்.

இத்துறைமுகம் மொரிசியசு மஜிரைம் அதிகாரசபையினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. உலகத்தின் பலநாடுகளிலிருந்து சரக்குகளைக் கொண்டுவரும் பாரிய கப்பல்கள் இங்கு வந்து கரையோர நங்கூரமிட்டு

## துறைமுக ஆளணி முகாமையாளரும் தலைமைப் பொறியியலாளரும் தமிழரே!

யிரக்கணக்கான இளைஞர்களை உறுப்பினராகக் கொண்டுள் ளது.

இளைஞர்களிடையே பொரு ளாதார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருவதோடு, அவர் களது அறிவாற்றலுக்கேற்ப தொழிற்பயிற்சியளித்து வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

கிராமங்களின் பொருளா தார அபிவிருத்திக்கு கிராமிய இளைஞர்களை ஊக்குவித்தல்.

சுயதொழில் வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கு இளைஞர் களுக்கு வேண்டிய பயிற்சியும் பணவசதியும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

### தொழில் நுட்ப உதவி

கிராமங்களில் பயனுள்ள பொருளாதாரத் திட்டங்களை மாற்றி அவர்களைப் பொரு ளாதார அபிவிருத்திகளில் ஈடுபடவைப்பதற்கான கல்வியை ஊட்டல். இவை போன்ற அடிப்படை நோக் கங்களுடன் செயற்பட்டுவரும் இளைஞர் இயக்கம் இதுவரை சர்வதேச வர்த்தகக்காட்சி இரண்டை நடத்தி மக்கள தும் அரசாங்கத்தினதும் பேரா தரவைப் பெற்றுள்ளது. சர்வதேச இளைஞர்கள் அமைப் புகளுடன் இணைப்பை ஏற் படுத்தியிருக்கும் இவ்வமைப்பு பிறநாட்டு இளைஞர்களுடன் கருத்துப்பரிமாறல்கள் ஒழுங் காக மேற்கொண்டு வருகிறது.

இவ்இளைஞர் அமைப்பு தனி யான ஒரு தலைமை அலுவலக கத்தை பலகோடி ரூபா செல வில் அமைப்பதற்கான வேலை களை ஆரம்பித்துள்ளது. சர்வ மலிருக்க முடியாது. இரவு பகலரக அயராது உழைத்து வரும் திரு. வைத்திலிங்கம் இலங்கைத் தமிழர் போராட் டத்திலும் மிக அக்கறை

## ‘தமிழர் தலைமையில்தான் இளைஞர் இயக்கமும்’

கொண்டவர். இலங்கையி லிருந்து இளைஞர்களை இவ் வியக்க மூலம் அழைத்துள்ள னர்.

இலங்கையிலுள்ள அறவழிப் போரட்டக் குழுவிற்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### போட்லூயிஸ் துறை முகம்

மொரிசியசு நாட்டில் இயற்கை வனப்புடன் சிறந்து

சரக்குகளை இறக்குவதற்கு வசதிகள் உண்டு. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களைப் பண்டகசாலை இடுவதற்கு விஸ்தீரணமான பல பண்டக சாலைகள் உண்டு. இந்நாட் டில் சீனி முக்கியமான ஏற்று மதியாக இருந்து வருகிறது. அவற்றைச் சேகரித்து, வைப் பதற்குப் பிரமாண்டமான பண்டகசாலைகள் உண்டு. இறக்குமதி செய்யப்படும் கோதுமையை அரைத்து மா வாக்கும் ஆலையும் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

குட்டிக்கதை

## தவறு!

நேசத்தின் அப்பா நேற்று வாங்கி வந்த நெக்ரோ சோடா வைக் குடித்துவிட்டு போத்தல் வாயை யும் நக்கி நன்றாகப் பொச்சடித்து விட்டுத் தான் போத்தலைக் கீழே வைத்தாள், நேச மணி. அடுத்த நாள் பாடசாலை விட்டு வீட் டிற்கு வருகிறாள். அழ கிய வெள்ளைச் சீருடை யில் கடும் பச்சைக் கலரில் சரிவாக இரண்டு சிவப்புக் கோடிட்ட கழுத்துப் பட்டியுடனும் துரு துருத்த விழிகளுட னும் மிகவும் அழ காக இருந்தாள் சிறுமி நேசம். கொளுத்தி எறித்த மத்தியான வெய்யிலில் நன்றாகக் களைத்துவிட் டாள். தாகம் நாவை வாட்டுகின்றது. தாயைத் தேடுகின் றாள். தாயார் அடி வளவில் மாட்டிற்குத் தண்ணீர் வைத்துக் கொண்டிருப்பது தெரி கிறது.

மேசையில் அழகிய வெள்ளைக் கொழும்புச் சோடாப் போத்தல் மெல்லிய இளம் சிவப்பு நிறத்தில் அவளுடைய கண்ணைக் கவருகின் றது. நேற்றுக் குடித்த சோடா அவளது நாவினை ஊறவைக் கின்றது. அடக்க முடி யாத ஆவலில் போத் தலை எடுத்து குடித்து விடுகின்றாள். அப் போதுதான் வீட்டிற் குள் வந்துகொண்டி ருந்த தாயார் அலறிப் புடைத்துக்கொண்டு ‘‘ஐயோ அது மண் ணெண்ணெய்யெடி’’ என் கத்திக் குளறி மயங்கி விழவிருந்த நேசத்தைத் தாங்கிப் பிடித்துக்கொண் டாள்.

— சி. சதாசிவம்

# வானொலி நாடகம் (1)

வானொலி ஒரு சிறந்த ஊடகம். எந்த ஒரு கருத்தை யும் மக்கள் மத்தியில் பரப்பு வதற்கு அதனையும் விடச் சிறந்த கருவி வேறில்லை. அத னாலேயே அரசாங்கங்கள் அர சியற்கட்சிகள், சமய நிறு வனங்கள், தொழிற்சங்கங்கள் சமூக சீர்திருத்தக் குழுக்கள் போன்றவை தமது பிரசார நோக்கங்களுக்கு வானொ லியை நன்கு பயன்படுத்துகின் றன. வானொலி நிகழ்ச்சிகளில் அதிகமானோர் விரும்பிக் கேட் பது நாடகம் என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

### வானொலி நாடகத்தின் சிறப்பு

நாடகம் அதன் வரலாற்றுக் காலத்தில் என்றுமே பெற்றி ராதசெல்வாக்கினை, வானொலி என்ற சாதனம் அதற்கு வழங்கியிருக்கின்றது. ஒரு நாடகம் வானொலியில் ஒலி பரப்பப்பட்டால், நாடுமுழு வதிலும்—சில வேளைகளில் நாட்டுக்கு வெளியேயும் ஒரே நேரத்தில் அது கேட்கப்படு கின்றது. கண்பார்வை குறை ந்துவிட்ட முதியவர்களிலிருந்து அதிக வாசிப்புப் பழக்கமில் லாத கதை கேட்கும் சிறுவர் கள்வரை குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒன்றாக வீட்டி லிருந்து கேட்டு மகிழ்கின்ற னர். கேட்ட பின்பு அதை விமர்சிக்கின்றனர். அதுபற் றிய தங்கள் கருத்துக்களையும் பறிமாறிக் கொள்கின்றனர். இத்தகைய ஒரு ஆர்வத்தினை யும் தாக்கத்தினையும் ஏற் படுத்தும் வாய்ப்பு எந்த ஒரு மேடை நாடகத்திற்கும் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை! இலக்கிய ஆக்கங்களில் நேரடியாகவும் விரைவாகவும் மக்களைச் சென் றடைவது வானொலி நாட கமே.

### வானொலி நாடகமும் ரி. வி. நாடகமும்

இன்று வானொலி நாடகங் களும் தொலைக்காட்சி (ரி.வி.) நாடகங்களுமே அதிக செல் வாக்குள்ள நாடக வகைகளா கத் திகழ்கின்றன. அதிலும் ரி. வி. நாடகம் வானொலி நாடகத்தைவிடக் கவர்ச்சி வாய்ந்தது. மறுப்பதற்கில்லை. வானொலி செவி என்ற ஒரு புலனுக்கு மட்டுமே விருந் தளிக்க. ரீ. வி. செவி, கண் ஆகிய இரு புலன்களுக்கும் விருந்தளிக்கிறதல்லவா? இருந் தாலும் சினிமாக்கலை மேடை நாடகக் கலையை ரசித்தது போல, தொலைக்காட்சி நாட கத்தினால் வானொலி நாடகத் தினை ஒதுக்கித்தள்ளிவிட முடியவில்லை. தொலைக்காட்சி நாடகக் கலை நன்றாக வளர்ந்து விட்ட மேலைநாடுகளிற்கூட இன்றும் வானொலிநாடகங்கள் விரும்பிக் கேட்கப்படுகின்றன.

எங்கள்நாட்டை விடுங்கள். இங்கிருந்து அகதிகளாக ஐரோப்பிய நாடு களுக்கும் கனடாவுக்கும் சென்று குடியேறிவிட்ட தமிழ் இளைஞர்கள் அங்கெல்லாம் தமிழ் வானொலி நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பிக்கேட்டு மகிழ்கிறார்களென்றால், வானொலி நாடகத்தின் செல் வாக்கினை பார்த்துக்கொள் ளுங்களேன்!

வானொலி நாடகங்களுடன் ஒப்பிடுகையில் ரீ. வீ. நாடகங் களில் சில குறைபாடுகளைக் காணலாம். வானொலி நாட கங்களில் எங்கள் கற்பனைக்கு நிறைய வேலை இருக்கிறது. நாங்கள் நாடகத்தைச் செவிப் புலன் வழியாக உள்வாங்கி எங்கள் மனத்திரையில் அரங் கேற்றிப் பார்த்து மகிழ் கிறோம். நாடகத்தின் கதை, சம்பவங்கள், பாத்திரங்கள், அவற்றின் அழகு, தோற்றம், குணாதிசயம் எல்லாவற்றையும் இப்படியே கற்பனை செய்து பார்த்து மகிழ்கின்றோம். நாடகாசிரியரது சொற்களும் நாடகத் தயாரிப்பாளரது ஒலி அமைப்புக்களும் (Sound effects) இந்தக் கற்பனை வளத் திற்கு உதவி செய்கின்றன. ரீ. வி, நாடகத்திலும் மேடை நாடகத்திலும் கற்பனைக்கு வேலை இல்லை. கண் முன்னால் காணும் கோலமே இறுதிக் கோலம். அழகான பாத்திர மென்றால் வானொலி நாடகத் தில் நாம் மிகவும் அழகான ஆணையோ, பெண்ணையோ கற்பனை செய்து கண்டு களிக் கிறோம். ஆனால் ரீ. வீ. நாட கத்தில் திரையில் தோன்றும் நடிக நடிகையரது அழகுடன் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

இன்று உலகில் வன்முறை களும் ஒழுக்கக் கேடுகளும் வளர்ந்து வருவதற்கு ரீ. வி பார்ப்பதும் பெருமளவு கார ணம் என்று சொல்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை வானொலிக்குக் கூறமுடியாது. வானொலி நாடகங்களை சில கட்டுப்பாடுகள் ஒழுக்க விதி களுக்கு அமையவே தயாரிக் கிறார்கள். செக்ஸ் சம்பந்த மான விடயங்களைக்கூட நாசூக்காகச் சொல்லிவிடு கிறார்கள். காலத்திற்கேற்ப, வானொலி நாடகங்களிலும் சில மாற்றங்கள் ஏற்படாம லில்லை. இருந்தாலும் காதாற் கேட்பதைவிட கண்ணால் காணும் பொழுது தூண்டுதல் கூடுதலாக ஏற்படுகிற தல்லவா?

வானொலி நாடகங்கள் வீட் டுக்கு வீடு கேட்கப்படுகின் றன. எத்தனை வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன? எங்கள் நாட்டைப் பொறுத்தவரை பத்துக்கு ஒன்று பார்க்கலாமா? வேறு வேலை செய்து கொண்டே வானொலி நாடகம் கேட்க லாம். கேட்க வசதிப்படா விட்டாலோ, நல்ல நாடகமென்றாலோ நாடாவில் பதிந்து வைத்துவிட்டுப் பின் னர்கேட்கலாம். ரீ. வீ. நாட கத்தைக் கதிரையில் இருந்து முழுக் கவனத்தையும் செலுத் தித்தான். பார்த்து ரசிக்க லாம். பதிந்து வைத்துப் பார்ப் பதற்கும் ‘டெக்’ வசதி வேண் டுமே!

மேடை நாடகங்கள் ரீ. வீ. நாடகங்களைவிட வானொலி நாடகம் தயாரிப்பதும் இலகு வானது. நேரம், இடம், சூழல், நடிக நடிகையர் பற்றியபிரச் சினையே அங்கில்லை. எந்தச் சம்பவத்தையும் எந்த இடத் திலும் எந்த நேரத்திலும் அமைக்கலாம். அதற்கேற்ற முறையில் நாடகாசிரியன் தனது பிரதியை எழுதிக் கொடுக்கவேண்டும். நாடகத் தயாரிப்பாளன் அதற்குப் பொருத்தமான ஒலித்தாக்கங் களை (Sound Effets) அமைத்து நாடகத்தைத் தயாரித்தால் அது தத்ரூபமாக அமைந்து விடும். (தொடரும்)

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

## ரகசியம்

ஒரு ஆணிடம் ரகசி யத்தை சொன்னால் ஒரு காது வழியே கேட்டு மாறுகாதுவழியேவெளி யேற்றிவிடுவான்.

ஓர் பெண்ணிடம் ரக யத்தை சொன்னால் இரண்டு காதுவழியே யும்கேட்டுவாய்வழியே வெளியேற்றிவிடுவாள்.

# தாய்மை விழித்தது

ஜானகியின் தகப்பன் கண்டியிலுள்ள பிரபலமான பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக விருந்து ஓய்வு பெற்றவர். கண்டியே சொந்த ஊர்மாதிரி ஆகிவிட்டது. நகரில் ஒரு வீடு விலைக்கு வந்தது வாங்கி விட்டார். எப்போதாவது யாழ்ப்பாணத்திற்குப் போய்வருவார்கள்.

ஒரே மகள் ஜானகி பீ. ஏ. பாஸ் செய்துவிட்டு ஆசிரியையாக விருக்கிறாள். அவரின் நண்பனின் மகன் சுந்தரம் எனும் சந்தரேசன், பெயருக்கேற்ற அழகன். டாக்டருக்குப் படித்து பேராதனை மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராயிருக்கிறான். அவனுக்குத்தான் ஜானகி என்பது எப்போதோ செய்த முடிவு.

அந்த முடிவில் மாற்றம் செய்யவேண்டுமென்று நிற்கிறாள் ஜானகி.

1977ல் நடந்த இனக் கலவரத்தின்போது, இவர்களது வீட்டை உடைத்து, தாயையும் தகப்பனையும்கட்டிப்போட்டனர். கொள்ளை நடந்தது. ஜானகி இழக்கக் கூடாததை இழந்து விட்டாள். அகதி முகாமிற்குப் போனதோ, யாழ்ப்பாணம் போய்ச்சேர்ந்ததோ அவளுக்குத் தெரியாது, அதிர்ச்சியிலிருந்து மீள பல மாதத்திற்கு மேலாகியது.

''பிள்ளை எல்லாத்தையும் கெட்ட கனவெண்டு மறந்து போடு'' என்று அம்மா சொல்லுவாள்.

''எப்படியம்மா மறப்பது.''

''ஐயோ! கடவுளே!'' என்று தலை தலையாக அடித்துப் புலம்பிய தாயை அடக்குகிறான் சுந்தரம்.

''மாமி ஏன் இப்ப ஊரைக் கூட்டிறியள்''

''தம்பி நீதான் டாக்டராச்சே இதுக்கொரு வழி செய்யன்''

''பிள்ளையையும் அழிச்சுப்போட்டு கலியாணமும் கட்டிக்கொண்டு வாழுவன் என்று நினைக்கிறியளே. நான் என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானிச்சுப் போட்டன்.''

''ஜானகி இஞ்ச வாருமன்.''

''என்ன?''

''தற்கொலை முயற்சியில் இறங்க மாட்டன் என்று சத்தியம் பண்ணித்தாரும்.''

முடியாது சத்தியம் செய்ய மாட்டன்.''

இப்ப வயித்தில. இதோடு நானும் மனிசியெண்டு நாலு பேருக்கு முன்னே வரமுடியுமே. எனக்கு மனம்வருமே அப்படி ஏன் வாழவேண்டும்.''

''சரி செத்துப் போனீர் என்று வையும். பிரேத பரிசோதனை செய்யும்போது திருமணமாகாமல் வயித்தில கர்ப்பம் என்று தெரிஞ்சுபோகுமே. அப்பா மாமா மாமிக்குத் தலைக்குனிவு. ஏன், எனக்குந்தான்.''

''ஐயோ என்னை என்ன செய்யச் சொல்றியள்.''

''ஒன்றும் செய்ய வேண்டாம். பேசாமல் என்னைக் கலியாணம் செய்து கொள்ளும் வீட்டிலும் நெருக்குகினம்.''

''என்ர கதை தெரிந்துமா இப்படிக் கேட்கிறியள்?''

''தெரிந்த படியால்தான் கேட்கிறன்.''

''ஆரெண்டாலும் எச்சில் பழத்தை சுவாமிக்குக் கொடுப்பினமே?''

''எச்சில் பட்டதைச் சுவாமிகள் உவர்ந்து ஏற்றதாக கதைகள் ஏராளம்.''

''என்னால் உங்களுக்கு ஒரு சுகமுமிராது.''


''நான் நல்லா யோசிச்சுத்தான் சொல்லுறன்.''

''நீங்கள் என்மேல் இருக்கும் பரிவில், ஒரு மனவெழுச்சியில் என்னை ஏற்றுக்கொள்கிறீர்கள். என்னிடமிருந்து பிரதிபலனாக ஒன்றும் கிடைக்காவிட்டால் உங்கள் செய்கைக்கு நீங்களே வருந்த வேண்டிவரும். அப்போ என்னை வெறுப்பீர்கள்.''

''இல்லவே இல்லை ஜானகி''

''பெறப்போகும் பிள்ளையை வளர்ப்பன் என்று நான் நினைக்கவில்லை. தமிழினத்தின் மேல் உள்ள வெறுப்பைக் காட்ட நடத்திய செயல் அது. அந்த அதீத வெறுப்பின் சாட்சியாக வளரும் பிள்ளைக்கு நான் எப்படி அம்மாவாக விருப்பன்!''

''பிள்ளையெண்டு இப்போ யார் சொன்னது. அப்படித்தான் இருந்தாலும் பிள்ளையில் உன் ரத்தமும் இருக்கும். கட்டாயம் நீ பிள்ளையை விரும்புவாய். நான் திருமணம் செய்தபின் இப்படி ஒன்று நடந்திருந்தால் உன்னையும் பிள்ளையையும் விட்டுவிட முடியுமா?''



கலியாணம் நடந்தது!

ஜானகி கண்டிக்குப் போக விரும்பவில்லை. சுந்தரம் வேலைக்குத் திரும்பிவிட்டான். ஜானகியிடம் கர்ப்பவதிக்குரிய அறிகுறிகள் காணப்பட்டன.

பிள்ளை வயிற்றில் ஊருவது துடிப்பதை உணர்ந்து தாய்மார்கள் பூரித்து விடுவார்கள்.

**- தியாகராஜன் -**

ஜானகி அப்படியில்லை. இந்த, வேண்டாத சுமையிலிருந்து எப்ப விடுபடுவோம் என்று காத்திருந்தாள்.

குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. நல்ல சிவப்பு ஜானகியும் சிவப்பு.

ஜானகி பால் குடுக்கமறுத்து விட்டாள். மகளை திட்டித் திட்டி மா டின்களைக் கரைத்துப் பருக்கினாள் தாய். கேட்டவர்களுக்குத் தாயிலை பால் இல்லையென்று சொல்லிச் சமாளித்துக் கொள்ளுவாள். குழந்தை அழகாகச்சிரிப்பான், தளர்நடை நடப்பான். ''பாரெடி எப்படிச் சிரிக்கிறான்'' என்று தாய் சொன்னால், பார்த்து நீதான் சந்தோசப்படு'' என்று வெட்டுவாள். தாயும் இப்படியுமொரு பெண் இருப்பாளோ என்று அலுத்துக் கொள்வாள்.

குழந்தைக்கு ஒரு வருடம் பூர்த்தியான வேளை, சுந்தரத்திற்கு சம்பியாவிலுள்ள ஆஸ்பத்திரியில் வேலை கிடைத்தது. ஜானகியும் அவனுடன் போய் விட்டாள். குழந்தையைக் கொண்டு செல்லவில்லை.

மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. சுந்தரமும் ஜானகியும் பெரியலீவில் வந்திருக்கிறார்கள்

குழந்தை பாட்டியைத்தான் அம்மாவென்றான். ஜானகி குழந்தையைத் திரும்பிப் பார்ப்பதில்லை.

படுக்கை அறையில் கட்டில்கள் பிரித்துப் போட்டிருப்பதைப் பார்த்து தாய் பெருமூச்சு விடுகிறாள். மருமகனைப் பார்க்கும்போது பாவமாக விருக்கும். ''இந்த அரக்கியால் அந்தப்பிள்ளை இளவயசு ஆசைகளை அடக்கிஅடக்கிவாழுதே'' என்று புருசனிடம் சொல்லிப் புலம்புவாள். மூன்று வருடங்கள் அந்நிய நாட்டில் தனித்து ஒரு வீட்டில் வாழ்ந்திருக்கிறார்கள் அப்படியும் சுமுக உறவு உண்டாகவில்லையென்றால் மகளை மனோதத்துவ வைத்தியரிடம் காட்டவேண்டும், மருமகன் டாக்டராச்சே அவருக்குத் தெரியாததாவென அவரும் கவலைப்பட ஆரம்பித்தார்.

அன்று தைப்பொங்கல்

சுந்தரம் குழந்தைக்குப் பட்டாசு கொளுத்தி விளையாட்டுக் காண்பிக்கிறான். ஒவ்வொருமுறை பட்டாசு வெடிக்கும்போதும் சுந்தரம் பயந்தது போல நடிக்கிறான். குழந்தை சிரிக்கிறான். கண்ணில் நீர் ததும்பும்வரை சிரிக்கிறான்.

ஜானகி பொங்கல்பானையை இறக்கிவைத்துவிட்டு தலைவாழைஇலை பரப்பி படையலுக்காக பித்தளைக் சுரண்டியால் புக்கையை அள்ளிப் போடுகிறாள். குழந்தை ஒரு வெடியை பொங்கல் அடுப்பினுள் போடுகிறான்.

படீர்!

பொங்கல் முழுவதும் சாம்பலும் நெருப்பும். ஜானகி ஆத்திரத்துடன் கரண்டியை வீசுகிறாள். குழந்தையில் அவளுக்கிருந்த வெறுப்பு, புக்கையெல்லாம் வீணாகிவிட்டதே என்ற ஆத்திரம் எல்லாமாக அவள் கைக்கு அவ்வளவு பலத்தைக் கொடுத்ததா?

'லொட்' என்று கரண்டி குழந்தையின் நெற்றிப் பொட்டில் தாக்குகிறது. அம்மாவென்று அலறிக்கொண்டு குழந்தை தரையில் விழுகிறான் நெற்றியிலிருந்து இரத்தம் குபுகுபுவென வழிகிறது. கையையும் காலையும் விலுக்விலுக்'' என்று உதைத்தபடி அறிவிழக்கிறான். என்ரை புள்ளையை கொண்டு போட்டியேடி பாவி என்று தாய் புலம்புகிறாள்.

அம்மா அவன் அழைத்தது தன்னையல்லவென்று ஜானகிக்குத் தெரியும். அம்மா என்ற வார்த்தை அவள் நெஞ்சத்தை யாரோ தட்டிவிட்டது போன்ற உணர்வு தேகமெல்லாம் புல்லரிக்க. பதைபதைத்து நின்றாள் ஜானகி.

குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றுவிட்டனர். ஜானகியை யாரும் வாவென அழைக்கவில்லை. மாலையில் திரும்பிய சுந்தரம் ''தையல் போட்டிருக்கிறார்கள், அறிவு வந்துவிட்டது இரண்டு நாட்கள் கவனிப்பில் இருக்கவேண்டுமாம்'' என்று அவள் கேட்குமுன்னே சொன்னான்.

மூன்று நாட்களின் பின் குழந்தை வந்துவிட்டான். அன்றிரவு படுக்கையறைக்குப் போன சுந்தரம் கட்டில்களுக்கிடையில் இடைவெளியைக் காணவில்லை. ஒன்றாக்கப்பட்ட கட்டில்களின் நடுவில்குழந்தை படுத்திருக்கிறான். அருகில் ஜானகி கையால் குழந்தையை அணைத்தபடி அயர்ந்திருந்தாள்.

(யாவும் கற்பனை)

## மஞ்சள் மகிமை

* மஞ்சள் இரத்த சம்பந்தமான வியாதிகளைக் குணமாக்கும்.
* மஞ்சளை அரைத்து காயம் பட்ட இடங்களில் தடவ காயம் ஆறிவிடும்.
* மஞ்சளை எரிய விட்டுப் புகையை மூக்கில் பிடித்தால் மூக்கிலிருலிருந்து நீர் வடிந்து சளி குணமாகும்.
* வயிற்றுப் போக்குக்கு ஒரு சிறந்த நிவாரணி மஞ்சள்
* தேள்கடித்தால் மஞ்சளைத் தீயில் போட்டுப் பொசுக்கி புகையை தேள் கடித்த இடத்தில் படும்படி செய்தால் வலி குறையும்.
* மஞ்சளை அரைத்து தலையில் பற்றுப்போட்டால் தலைச் சுற்றுக்கு நல்லது.
* மஞ்சள்சுண்ணும்பு இரண்டையும் அரைத்துக் கலவையைப் போட்டால் காயம் ஆறும். இரணம் ஆறும் வலியும் குறையும்.
* இரவில் மஞ்சளை புகை பிடித்துச் சிறிது நேரம் எந்த திரவ பதார்த்தத்தையும் உட்கொள்ளாமல் இருந்தால் சளி நீங்கும்.
* மஞ்சளையும் கொய்யாக் கொழுந்தையும் சேர்த்து தேமல் இருக்கும் இடங்களில் பூசி ஐந்து நிமிடமளவில் இருந்து குளித்து வர நல்ல பலன் கிட்டும்.
* மஞ்சளையும் மிளகையும் தூள் செய்து சூடான பாலில் கலந்து குடித்தால் தொண்டை கரகரப்பு நீங்கும்.
* மஞ்சளையும் சுண்ணும்பையும் குழைத்துப் பூசச் சுளுக்குகள் நீங்கும்.
* மஞ்சளையும் எலுமிச்சம் பழச் சாற்றையும் கலந்து முகம் கைகளில் பூசிக் கழுவினால் பளபளப்பாகக் காட்சி தரும்.

தொகுப்பு
**எஸ். வி. சிவானந்தன்**
பருத்தித்துறை.

## கொடுமைகள் சாய்வது திண்ணம்

அங்கொரு செங்கோல்
அசைந்திடப் பாண்டி நா(டு)
அனல் பற்றி எரிந்ததும்
பெண்ணால்
இங்கொரு இராவணன்
சீதையைக் கவர்ந்திட
ஈழமும் எரிந்தது
அந் நாள்
வங்கப் பூ மலர்ந்ததும்
வன்செயல் ஓய்ந்ததும்
வரலாற்று இந்திரா
தன்'ஞல்
சங்கொலி முழங்கும் நம்
சரித்திரம் மாறுமிங்
கெங்களின் மகளிர்
முன் னணியால்!

நாட்டுக்காய் ஈன்ற
நம்மகன் அஞ்சிடில்
நல்லமு தூட்டிய மார்பை
ஈட்டியால் தாக்கி
இழந்திடத் துணிந்த
இன்தமிழ் வீரத்தின் மரபு
நாட்டினுள் புகுந்து
நம்முயிர் குடித்திட
நாடிடும் கொடியரின் வேட்டைக்
கோட்டினைத் தகர்க்கக்
கொண்டது சபதம்
கொடுமைகள் சாய்வது திண்ணம்.

**- நெடுந்தீவு லக்ஸ்மன்**

# பல்சுவை விருந்து

# ஞாயிறு மஞ்சரி

### கிளி

நியூயோர்க்கைச் சேர்ந்தவர் அல்பர் பல்லார்டு. இவரது பொழுதுபோக்கு வெளி நாட்டுப் பறவைகளை வளர்ப்பது. இவரிடம் 200க்கும் அதிக மான பறவைகள் இருக்கின் றன. பறவைகளில் இவருக்குப் பிடித்தமானது கிளிதான்.

### முழுக்கோழி

2·1 கிலோ எடையுள்ள ஒரு முழுக் கோழியின் இறைச்சியை 10 நிமிடம் 37 வினடிகளில் தின்று தீர்த்த வர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த வேலண்டின் ஃபிளா ஸன் டிறேமுனஸ் என்பவர்தான். 1986 ஏப்ரல் 27-ந் திகதியன்று இவர் இந்த சாதனையை புரிந்தார்.

### 60 மில்லியன்

கின்னஸ் சாதனையான புத்த கம் 1955லிருந்து இதுவரை 31 மொழிகளில் 60 மில்லியன் பிரதிகள் விற்பனையாகியிருக் கிறது. விற்பனையில் பைபிளுக்கு அடுத்தபடி கின்னஸ் புத்தகம்.

### பணம்

பணம் இருந்தால் உங்களையே உங்களுக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் ஒரு வருக்கும் உங்களை தெரியாது.

—ஸ்பானிய பழமொழி

### ஆய்வு

சுமார் 4600 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட ஸ்பிங்க்ஸ் பிரமிட்டின் அடிபாகத்தில் உள்ள காற்றை பாட்டில்களில் நிரப்பி எடுத்து வந்து ஆய்வு நடத்தச் சில வல்லுனர்கள் முயன்று வருகிறார்கள்.

### பம்பாய்

பம்பாய் நகருக்கு அகில உலக அளவில் ஒரு பெருமை கிடைத்திருக்கிறது. டாக்ஸி, ஆட்டோ, ரிக்சோக்கள் தொகையில் உலகில் இரண் டாவது இடத்தைப் பிடித் திருக்கிறது. முதல் இடம்? மெக்சிக்கோவுக்கு மெக்சிக் கோவில் 62,000 வாகனங்கள் உள்ளனவாம். பம்பாயில் 58,000 வாகனங்கள். இதில் 58,000 டாக்ஸிகள், 24,000 ஆட்டோக்கள்.

### பின்னணி

இந்தியாவில் முதன்முதலில் பாக்கியச்சக்கரா என்ற வங் காளப் படத்தில்தான் பின் னணி இசை சேர்க்கப்பட்டது. சேர்க்கப்பட்ட ஆண்டு 1934.

### சோம்பேறி

இந்தியாவில் கன்னியா குமாரி மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்தி லும் 'சோம்பேறி' என்ற பெயரில் ஊர்கள் உள்ளன.

### எழுத்துப் படிப்பு

இன்றைய திகதியில் இந் தியாவில் எழுதப்படிக்க தெரி யாதவர்கள் தொகை 42,42,56,000. இதில் பெண் கள் 24,16,11,145 பேர் அகில உலகிலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தொகை என்ன தெரியுமா? 889 மில்லியன்.

### 40 சிங்கங்கள்

1925-ம் ஆண்டில் அல்பிரட் ஷண்டர் என்ற சர்க்கஸ் வீரர் ஒரு ஆண்டுக்குள் ஒரே சமயத்தில் 40 சிங்கங்களுக்கு சாப்பாடு போட்டுச் சமாளித்து சாதனை புரிந்திருக்கிறார்.

### டாக்டர்கள்

உலகில் மிக அதிக எண் ணிக்கையில் டாக்டர்கள் உள்ளநாடு ரஷ்யாதான். அங்கு தற்போது மொத்தம் 8,31,000 டாக்டர்கள் உள்ள னர். 307பேருக்கு ஒரு டாக்டர் என்று கணிக்கப்படுகிறதாம்.

### 10,000 தினம்

தென்னாபிரிக்க இனவிடு தலைப் போராட்டத்தலைவர் நெல்சன் மண்டேலா கடந்த 20-ம் திகதியன்று சிறையில் 10,000-வது தினத்தை கழித் தார். இது ஒரு உலக சாதனை!

### 1400 பேர்

கான் வித் த வின்ட் Gone with the Wind) என்ற ஹலிவூட் படத்திற்கு நடிகர் தேர்வுக்காக மட்டும் 92,000 டாலர் செலவிடப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பாத்திரத் துக்காக மட்டும் 1,400 பேர் பேட்டி காணப்பட்டனர்.

### சோயாபீன்ஸ்

நரம்பு சம்பந்தப்பட்ட வியா திகளை குணப்படுத்தும் சக்தி சோயாபீன்ஸ்க்கு உண்டு. சர்க்கரை வியாதிக்காரர் களுக்கு மிகச் சிறந்த உணவா கும். இதில் நாற்பது சதவிதம் புரதமும், இருபத்தாறு சத விதம் காபோவைதரேற்றும், இருபது சதவீதம் எண்ணெய்ப் பொருளும், நான்கு சதவீதம் தாதுப்பொருளும் இரண்டு சதவீதம் கொழுப்பும் உண்டு.

### பெரிய தேன்கூடு

ஆஸ்திரேலியாவில் காட்டுத் தேன் கூடு ஒன்றில் மட்டுமே 249.5 கிலோ தேன் கிடைத் தது அநேகமாக உலகிலேயே மிகப்பெரிய தேன்கூடு என்று இதைத்தான் குறிப்பிடவேண் டும்.

### விநாயகி

எத்தனையோ விநாயகர்கள் இருக்கிறார்கள். ஆனால் பெண் விநாயகர் சுசீந்திரம் கோவி லில் மட்டும் இருக்கிறார். இங்கே உள்ள பெண் விநாய ருக்கு விநாயகி என்று பெயர்.

### கவிஞரின் கண்ணீர்

„கவியரசு கண்ணதாசன் கவிதைகளைதானே எழுத மாட்டார். அவர் சொல்லச்சொல்ல ஒருவர் எழுதுவார். எவரது மறைவிற்காக இரங்கல் கவிதை எழுதும்போது கவிதையைச் சொல்லச் சொல்ல தானும் அழுதழுது எழுது பவரையும் அழவைத்து விடுமளவிற்கு உருக்கமாக சொல்லுவாராம்.

நாதசுரச் சக்கரவர்த்தி இராசரத்தினம் பிள்ளை மறைந்தபோது அவருக்காக கவியரசு இரங்கற்பா சொல்லிக் கொண்டிருந்தார்.

செவியினில் ஓடி எங்கள் சிந்தையில் கூடி
இப்புவியினில் ஓடி நின்றால் பொங்கிய தேடி
வேறங்கெவரிடம் போகும்''

என்ற கவிதையை கவிஞர் சொல்லிக்கொண்டிருக் கிறபோதே அவரது கண்களில் கண்ணீர் ஓடிக்கொண் டிருந்தது. எழுதுபவரின் கையைப் பிடித்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாராம். எழுதுபவரும் சேர்ந்து அழ இருவரின் அழுகையும் அடங்க வெகு நேரமாயிற்றும்.

—தனு

### வங்கியில் திருட்டு

ஆக்லண்டில் ஒரு வங்கியில் உள்ள 3 காசாளர் களில் ஒருவர் மட்டுமே கட மையிலிருந்ததால் ஒரு திருட ரால் 100,000 டாலரை எளி தில் தட்டிக்கொண்டு வெளி யேற முடிந்தது. அந்தச் சம யத்தில் மற்ற இரண்டு காசாள ரும் வங்கியில் திருட்டு நடை பெறுமல் தடுப்பது எப்படி என்று சக ஊழியர் களுக்கு வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார்களாம்.

### உயர்ந்த பாலம்

சிசிலியில் இர்மினியோ நதி யைக் கடக்க 155 அடி உயரத் தில் ஒரு பாலம் கட்டப்பட்டு உள்ளது .ஐரோப்பாவிலேயே மிக உயர்ந்த பாலம் இது தான்.

### நீரில் நடக்கிறார்

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வேஸ்லி கெண்டால் என்பவர் நீரில் நடப்பதில் தீரர் இந்த 'வாட்டர் வாக்கர்' இதற்காகவே பொலிதீனில் இரு மிதப்புச் செருப்புகளைத் தயாரித்திருக்கிறார். இந்த செருப்புகளை அணிந்து கொண்டு இரு துருப்புக் குச்சி களினால் நீரைப்பின்னால் தள்ளி னால் எளிதில் நீரில் செல்ல முடி கிறது.

### நீளமானசைக்கிள்

டென்மார்க்கில் சோஜ் நக ரில் 1976ம் ஆண்டு தயாரிக்கப் பட்ட 'மல்டி, பிட்' என்ற சைக்கிள்தான் உலகிலேயே மிக நீளமான சைக்கிள். 72 அடி நீளமும் ஒன்றின் கீழ் மூன்று டன் நிறையும் கொண்ட இந்த சைபிக்கிள் ஒரே சமயத்தில் 36 பேர் செலுத்தலாம்.

### வேகமான கமரு

இங்கிலாந்தில் பாவிங்டன் நகரத்தை சேர்ந்த ஜான் ஹட்லாண்டு என்பவர் இமா கான் 675 என்ற புதிய கமரா வைத் தயாரித்திருக்கிறார். இதுதான் இன்று உலகிலே வேகமாக படம் எடுக்கும் புகைப்படக் கருவி என்று கருதப்படுகிறது.

### நம்பமுடியாத சம்பவம்!

பெர்னார்ட் கெய்சர் என்ற கப்பல் முதலாளி பெரிய கோடீஸ்வரர். டிம்ஸபரி என்ற இடத்தைச் சேர்ந்த இவர் சமீபத்தில் இறந்தபோது தன் தோட்டத்தில் தோட்டக்காரனாக 30 வருடங்கள் இருந்த தொன்சிமித் என்பவருக்கு சுமார் 10 லட்சம் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை தன் உயிலில் வழங்கிவிட்டார். தன்னால் நம்பவேமுடியாததசம்பவம் இதுஎன்றுதொன்சிமித் கூறினார்.

### 346 ஆலயங்கள்

கிரிஸில் பாட்மாஸ் என்ற தீவு இருக்கிறது. இந்தத்தீவில் 4500 மக்களே வசிக்கிறார்கள். இந்த நாலாயிரம் மக்களுக்கு 346 ஆலயங்கள் அங்கு இருக் கின்றன. தடுக்கி விழுந்தால் ஒரு கோயில் என்பார்களே அது இங்குதான்.

### அதிகம் குழந்தைகள்

இன்று உலகிலேயே அதிகக் குழந்தைகள் கொண்ட நாடு இந்தியாவா? இல்லை. இன்று அந்த விடயத்தில் கென்யா தான் முதலிடம் வகிக்கிறது! இன்று அந்த நாட்டு மக்கள் தொகையில், பாதிப்பேர் குழந்தைகள், சிறுவர் சிறு மியர்தான்.

### நீளமான பெயர்கொண்ட ஊர்

உலகிலேயே மிக நீளமான பெயர் கொண்ட ஊர் எது? பிரிட்டிஷ் தீவுகளில் உள்ள அந்த ஊரின் பெயர் 'ல்லான் வேர்பலில் கிவைன் சிலலோ கோகன்ஜேஸி ரண்டிரோப் வில்லண்டி சில்லோகோகோச்' என்ற ஊர்தான்.

### கடல்நீரில் தங்கம்

கடல் நீரில் வெள்ளியும், தங்கமும் இருக்கிறது. எவ் வளவு தெரியுமா? ஒவ்வொரு மில்லியன் பாகங்களிலும் 0,0003 பாகம் வெள்ளியும், 0,000006 பாகம் தங்கமும் இருக்கிறது.

மஸ்' என்ற புழுவைத்தான் குறிப்பிடவேண்டும். இது 55 அடி நீளமானது.

### பெரிய மலர்

மலேசியாவைச் சேர்ந்த சுபா தீவில் காணப்படும் சல்பலிசியா என்ற செடியின் மலர்தான் உலகிலேயே மிகப் பெரிய மலராம். இந்த மல ரின் அளவு சுமார் 90 செ. மீ. அதாவது கிட்டத்தட்ட 3 அடி இந்த மலர் பூத்த 3 அல்லது 4 மணி நேரத்தில் வாடிப்போகிறது.

### இருமுறை குளிக்க வேண்டும்

அடிக்கடி சிலருக்கு உடம்பு வேர்க்கும் இத னால் கெடுதல் ஒன்றும் இல்லை. அடிக்கடி உடம்பு வேர்ப்பவர்கள் தினசரி இரண்டு முறை குளிக்க வேண்டும். பயந்த சுபாவமுள்ள வர்களுக்குத்தான் இப் படி அடிக்கடி வேர்க் கிறது. தைரியமாக இருந்தால் இப்படி அடிக்கடி வேர்ப்பது நின்றுவிடும்.

### மான்

உலகில் அதிக காலம் வாழ்ந்த மான் அமெரிக்கா வில் மல்வார்க்கி நகர மிருகக் காட்சிச்சாலையில் இருந்த ஒரு செம்மான்தான். 1964 யூன் 28-ந் திகதி அது இறந்த போது அதற்கு வயது 26 வயது 8 மாதம்.

### நகைகள் அணியக்கூடாது

ரோமன் நாட்டு மன்னனாக ஜூலியஸ்சீசர் அதிகமாக பிள் ளைகள் பெற்ற தம்பதிகளுக்குப் பரிசுகள் வழங்கினன். பிள்ளை பெறாத பெண்ணானல் அவள் நகைகள் அணியக்கூடாது. அலங்காரம் செய்து கொள்ளக் கூடாது, பொது இடங்களில் வண்டிகளில் செல்லக்கூடாது. என்றெல்லாம் சட்டம் போட் டிருந்தான்.

### 55 அடி நீளமானபுழு

உலகிலேயே மிக நீளமான புழு என லீன்ஸ் லாங்கிஸ்

### ஆரம்ப பெயர்

விம்பிள்டன் கோப்பையின் ஆரம்பகாலப் பெயர் என்ன? 'ப்.பில்டு கப்' என்பதாகும்.

### உயரமான நகரம்

தென் அமெரிக்காவில் போல்வியா மாநிலத்தில் பொட்டாசி என்ற நகரம் இருக்கிறது. இதுதான் உலகி லேயே மிக உயரமான நகரம்.

### காந்திஜி வங்கிக்கணக்கில் 248 ரூபா!

புனே நகரில் உள்ள பாங்ஒப் இந்தியாவின் கிளை ஒன் றில் மகாத்மா காந்திக்கு இன்னமும் கணக்கிருக்கிறது. 1940–4 இல் காந்தி புனேயில்உள்ளஆகாகான் மாளிகை சிறையில்வைக்கப்பட்டபோது பாங்க் ஒப் இந்தியா கிளை யில்10,000 ரூபா, போட்டு கணக்கை துவக்கினார். அடிக் கடி பணம் எடுத்ததால், இருப்பு குறைந்துபோனது. எனவே கணக்கில் பற்று வரவு செய்வதை நிறுத்தி விட்டார். இன்று அந்தக் காந்திக் கணக்கில் உள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 248 ரூபா மட்டும் தான்.

## கைத்தொழில் உலகில்

# சாதனை படைத்த

# தொழிற்சாலை

### கணக்காளருடன் ஒரு பேட்டி

''இரும்பை உருக்கிடுவீர்
உற்பத்தியைப்பெருக்கிடுவீர்''

**பா**ரதியாரின் கவித்துவத்திற்கு சட்டியம் கூறுமாப்போல் விளங்குவது நீர்வேலி காமாட்சி அம்பாள் இரும்புத் தொழிற்சாலை.

இரும்பு உற்பத்தியில் தன்னிகரற்று தனக்கென ஓர் தனித்துவத்துடன் திகழ்வது காமாட்சியம்பாள் இரும்புத் தொழிற்சாலை என்றால் மிகையில்லை.

ஒரு பகுதியில் கத்திகள், பூட்டுகள் குவிந்துகொண்டிருக்கும், வியர்வை சிந்த கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கும் தொழிலாளர்... உழைப்பின் மகத்துவத்தை நன்குதெரிந்துசொண்டனர் போலும். இன்று கைத்தொழில் துறையில் முன்னணியில் திகழும் ஜப்பானியர்களும் இப்படி கடுமையாக உழைத்ததால் முன்னணியில் உள்ளனரா? என்று நம்மை சிந்திக்க வைக்

**(ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது வெறுமனே விவசாயத்துறை அபிவிருத்தியில் மட்டும் தங்கியிருக்கவில்லை. கைத்தொழிற்துறையுடன் கூடிய விவசாய அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது பொருளியலாளர்களின் கருத்தாகும். அந்தவகையில் இரும்புத்தொழிலில் சாதனை படைத்த தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் பற்றிய சில தகவல்களை வாசகர்களுக்கு தருகிறோம்.)**

நீர்வேலியில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, அகில இலங்கையிலும் இத்தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு தனி இடம் உண்டு.

அதுமட்டுமல்ல இரும்பு உற்பத்திப் பொருட்களில் போட்டியின்றி தனியுரிமைபெற்ற ஒரு நிறுவனமாக விளங்குவது என்றால் காமாட்சியம்பாள் இரும்புத்தொழிற்சாலையையே கூறலாம்.

கிறது இவர்களின் கடுமையான உழைப்பு.

நாம் மேற்கூறிய காட்சிகளை இப்பொழுது பார்க்சமுடியாது பலநூறு தொழிலாளர் ஓடியாடி வேலைசெய்த இடத்தில் தற்போது ஒரு சிலர் மட்டும் வேலை செய்கிறார்சள். கலகலப்பாக இருந்த இடம் இன்று ஓய்ந்து சனசந்தடியற்று காணப்படுகிறதே! இதைப் பற்றி சிந்திப்பார் இல்லையா? மீண்டும் இத்தொழிற்சாலை

## நீர் சொல்லுவது ரொம்பச் சரி

ரஷ்யாவின் கடைசி ஜார் சக்கரவர்த்தியான அலெக்ஸாண்டரை அவருடைய முதல் மந்திரி ஒருநாள் பேட்டிகண்டு பேச வந்தார். ராஜ்ய நிர்வாகத்தைப் பற்றி முதல் மந்திரி கூறியவற்றுக்கெல்லாம் ஜார் தலையை அசைத்து ''நீர் சொல்லுவது ரொம்பச் சரி'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

முதல் மந்திரி போன பிறகு பிரதம சேனுபதி சக்கரவர்த்தியைப் பார்க்க வந்தார். முதல் மந்திரி கூறியவற்றுக்கு முற்றும் மாறுபட்ட அபிப்பிராயங்களைச் சேனுபதி கூறினார். அவருக்கும் அலெக்ஸாண்டர் தலையை அசைத்து ''ஆமாம் நீர் சொல்லுவது ரொம்ப சரி என்று கூறி வந்தார்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள் அருகிலிருந்த அலெக்ஸாண்டரின் பத்தினியான ஜார் சக்சரவர்த்தினி. சேனுபதி போன பிறகு சக்கரவர்த்தினி தன் கணவரைப் பார்த்துக் கூறினார்:

''அலெக்ஸ் முதன் மந்திரி கூறியவற்றுக்கெல்லாம் தாங்கள் தலையை அசைத்து நீர் சொல்லுவது ரொம்ப சரி என்று ஆமோதித்து வந்தீர்கள்.''

''ஆமாம் என் கண்ணே''

''பிறகு சேனுதிபதி வந்து முதல் மந்திரி கூறியவற்றுக்கெல்லாம் மாறுன கருததுக்களைக் கூறினார்.

''ஆமாம் கண்மணி''

''சேனுபதி கூறியவற்றுக்கும் நீர் சொல்லுவது ரொம்ப சரி என்று தாங்கள் ஒப்பம் வைத்து வந்தீர்கள்.''

''ஆமாம் என் பிரிய சகி''

''இப்படி முற்றும் மாறுன அபிப்பிராயங்களைக் கூறிய இருவருக்கும் 'நீர் சொல்லுவது ரொம்ப சரி' என்று தாங்கள் தலையை ஆட்டி வந்தது எனக்குப் பிடிக்கவில்லை.''

''என் கண்மணி 'நீர் சொல்லுவது ரொம்ப சரி' என்றார் அலெக்ஸாண்டர்.

**தசமுகன்.**

தொழிற்சாலையின் உள்ளே நோக்குவோமேயானால் விற்பனைப்பகுதி, நிர்வாகப்பகுதி, களஞ்சியப்பகுதி தொழிலாளர் பகுதி எனப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உற்பத்தி வேகமாக நடைபெறுவதைப் பார்க்கலாம்.

இன்னும் சற்று உள்ளார்ந்து நோக்குவோமேயானல் டமார்...... டமார் என்ற ஒலியும், தகதகவென கண்ணைப் பறிக்கும் பிரகாச ஒளியில் ஒட்டுவேலை நடந்துகொண்டிருக்கும். இன் புத்துயிர்பெறும் நாள் வராதா?

நீண்டகாலமாக இத் தொழிற்சாலையில் கணக்காளராகக் கடமையாற்றும் திரு. கந்தசாமியுடன் உரையாடும் சந்தர்ப்பம் அண்மையில் கிடைத்தது. அவர் எமக்கு தந்த விடயங்களின் தொகுப்பை இங்குதருகிறோம்.

கேள்வி; இத்தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

பதில்: இத்தொழிற்சாலைக்கான ஆரம்ப நடவடிக்கை 2-11-1949ம் ஆண்டு தர்மலிங்கம் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் சிறுகாணியில் ஒரு கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு பின்பு படிப்படியாக முன்னேறி தொழிற்சாலைக்கு என ஒரு நிரந்தரக் காணியில் பாரிய கட்டடம் அமைக்கப்பட்டு இன்றும் செயல்பட்டு வருகிறது.

நோக்கம் என்று கூறும் போது கூட்டுறவு அடிப்படையிலே உற்பத்தி மேற்கொண்டு பொருட்களை சந்தைப்படுத்தவும், குடிசைக் கைத்தொழில் மட்டத்திலல்லாமல் பாரிய அளவில் உற்பத்தி மேற்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்திலும்தான்.

கேள்வி. எத்தனை தொழிலாளர்கள் கடமையாற்றுகிறார்கள்?

பதில்: தொழிற்சாலை உன்னத வளர்ச்சியடைந்த காலத்

**நீர்வை கணேஸ்**

தில் 100 பேருக்கு மேல் வேலை செய்தனர். தற்பொழுது 15 பேர் மட்டும் கடமையாற்றுகிறார்கள்.

கேள்வி: எவ்வகையான உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன?

பதில்; கத்தி, மண்வெட்டி, கதவுப் பூட்டுக்கள் பிணைச்சல், உட்பட வீட்டிற்குத் தேவையான சகல பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன. மற்றும் கிருமிநாசினி தெளிகருவிகள் அவற்றின் உதிரி பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திர தள்ளு வண்டி (வாட்டர் பம் ரெலி) உட்பட சகல பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

கேள்வி:- உற்பத்தி என்று கூறும் போது மரத்தினல் ஆன உற்பத்திகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டதாக அறிகிறோம். உண்மையா?

பதில்: ஆம் ஆரம்பத்தில் மரத்தினலான உற்பத்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தோம். ஆனல் தற்பொழுது

(10-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கும் மேற்கும் -1

# வீரபாண்டிய கட்டபொம்மனும் நெப்போலியனும்

[கட்டப்பொம்மு மன்னன் — 1790 — 1799 - 10 - 16
மாவீரன் நெப்போலியன் — 1769 — 1821 ]

**- முருகு -**

''அடுத்தவர் ஆட்சி ஏற்கோம்!
அடிமையாய் வாழோம்'' என்று
கடுஞ்சமர் செய்த வீரன்
தெருவினில் மாண்டான் கிழக்கே
அயலுள்ள நாட்டை யெல்லாம்
அடிமையாய்க் கொண்டு ஆள
அயர்வின்றி உழைத்த வீரன்
சிறையில் மாண்டான் மேற்கே!
வீரத்தின் தன்மை இரண்டாய்
வேறுபட் டிருக்கக் காண்பீர்!
வீரத்தின் முடிவும் இங்கே
கூறுபட் டிருக்கக் காண்பீர்!

★

கொள்ளரும் வீரம் ஓங்கி
விளைகின்ற திருநெல் வேலி
கொள்ளுமோர் குறிச்சி பாஞ்சைப்
பதியினைக் கட்டப் பொம்மு
வெல்லரும் பாண்டி மன்னன்
மணிமுடி தாங்கி ஆண்டான்!
சொல்லரும் வீரம் நேர்மை
நீதியோ டாட்சி செய்தான்!
பிறந்தமண் மேலே காதல்
கொண்டதால் கட்டப் பொம்மு
பிறந்தமண் மேலே மாற்றார்
தீண்டவே சகிக்கா வீரன்!
வெல்லரும் பாஞ்சை நாட்டை
வென்றிட எண்ணங் கொண்டு
வெள்ளையர் பாஞ்சை மண்மேல்
பலமுறை மோதித் தோற்றார்!

''என்னல மிழந்த போதும்
என்னர சிழந்த போதும்
என்னுயிர் இழந்த போதும்
என்னுயிர் நாட்டைக் காப்பேன்!
வெள்ளையர் எனது நாட்டை
ஆளநான் பொறுக்கேன்'' என்று
வெள்ளையர் செயலை யெல்லாம்
வெள்ளையர் பணிப்பை யெல்லாம்
வெள்ளையர் மலைக்கும் வண்ணம்
துணிவுடன் எதிர்த்து நின்று
வெள்ளையர் கலைக்கும் வண்ணம்
களத்திலும் மோதி நின்றான்!
வெள்ளையர் முடிவில் ஓர்நாள்
பாஞ்சையைச் சூழ்ந்து கொண்டார்!
வெள்ளையர் திகைக்கும் வண்ணம்
பாண்டியன் எதிர்த்து நின்றான்!
முழங்கிடும் பீரங்கி முன்பும்
தீகக்கும் துவக்கின் முன்பும்
வழங்குமோ நீண்ட நாட்கள்
வேலுடன் வில்லும் வாளும்?

வெள்ளையர்க் கெதிராயுள்ள
தன்நண்பர் உதவி சேர்த்து
வெள்ளையர் மீது மீண்டும்
மூர்க்கமாய்ப் பொருதும் வண்ணம்
வெள்ளையர் அறியா வண்ணம்
பாஞ்சையை விட்டுச் சென்று
வெள்ளையர்க் குதவி நின்ற
புதுக்கோட்டை மன்ன னிட்ட
வஞ்சக வலையைச் சற்றும்
அறிந்திடாப் பொம்மு மன்னன்

வஞ்சனை வலையில் வீழ்ந்து
வெள்ளையர் கரத்தைச் சேர்ந்தான்!
பிறந்தமண் காக்கும் போரில்
தோற்றிடாப் பொம்மு; ஒன்றாய்ப்
பிறந்தவன் விரித்த வஞ்ச
வலையினில் வீழக் கண்டு
பிறந்தமண் மீதிற் பற்றுக்

கொண்டவர் உள்ளம் வெந்தார்!
பிறந்தமண் மீதிற் பற்றைக்
கொன்றவர் மகிழ்ந்து நின்றார்!
கயமையிற் சிக்கிக் கொண்ட
மன்னனை வெள்ளைக் காரர்
கயத்தாற்றுத் தெவில் நின்ற
புவியினிற் தூக்கி லிட்டார்!

தனதன்னை நாட்டின் ஆட்சி
உலகெலாம் நிலைக்கும் வண்ணம்
தனதன்னை நாட்டை மாற்றார்
தலைகுனிந் தேற்கும் வண்ணம்
தன்திரு நாட்டின் ஆட்சித்
தலைமையை வலிந்து ஏற்றுத்
தன்திரு நாட்டின் வாழ்வைத்
தன்னுயிர் மூச்சாய்க் கொண்டு
தன்புய வலிமை காட்டித்
தன்படை வலியைக் கூட்டித்
தன்னயல் அரசை யெல்லாம்
தன்பலம் கொண்டு வீழ்த்தித்
தாய்த்திரு நாடாம் பிரான்ஸின்
தன்னிக ரில்லாத் தலைவன்
தானென்று முரசம் கொட்டித்
தரணியே நடுங்கும் வண்ணம்
தாயகம் பிரான்ஸை ஆண்டான்
மாவீரன் நெப்போ லியனே!

தாய்த்திரு நாட்டின் கீர்த்தி
பெருக்கிடும் போரி லெல்லாம்
வாய்த்தநல் வெற்றி கண்டு
போர்வெறி கொண்ட வீரன்
பிரிட்டனைத் தாக்கி வெற்றி
கொண்டிட முனைந்து சென்றான்!
பிரிட்டனே தனது கப்பற்
படையினு லிவனை வெல்ல
ருஷ்ய நாட்டின் மேற்தன்
படையினை நடத்திச் சென்றான்!
ருஷ்யா நாட்டி யற்கை
பகைத்தாற் போரிற் தோற்றுப்
பிரான்ஸினை நோக்கி வந்த
நெப்போ லியனின் படையைப்
பிரான்ஸினுக் கெதிராம் மூன்று
நாடுகள் அணி திரண்டு
துணிவுடன் லீப்சிக் கென்னும்
களத்தினில் எதிர்த்த போது
துணிவுடன் படையைச் சேர்த்து
மோதியும் பிரான்ஸு அந்தப்
போரினிற் தோற்கக் கண்டு
எதிரிகள் நெப்போ லியனைப்
போர்க்கைதி யாக்கி எல்பாத்
தீவுக்குக் கடத்தி விட்டார்!
ஆயினும் வலிமை மிக்கோன்
சிறையினி லிருந்து தப்பித்
தாயினும் உயர்ந்த நாட்டின்
பெருமையை மீண்டும் நாட்டப்
பிரான்ஸுக்கு ஓடி வந்து
மீண்டும்தன் படையைச்
சேர்த்தான்!

பிரான்ஸினிச் செயலைக் கண்டு
பிரான்ஸினுக் கெதிராம் நாலு
நாட்டினர் அணி திரண்டு
பெரும்படை யுடனே பிரான்ஸை
வாட்டர்லூக் களத்தில் வென்று
வீரன்நெப்போ லியனை மீண்டும்
சிறைப்பிடித் தவனை ஹெலினுத்
தீவுக்கு அனுப்பி வைத்தார்!
சிறையிலே ஆறு ஆண்டு
துயருற்று உலகை நீத்தான்!!

★

''பிறந்தமண் உரிமை காக்க
வெள்ளைய ருடனே மோதப்
பிறந்தவன் இவனே'' என்று
துதித்ததைக் கிழக்கிற் கண்டோம்!
பிறந்தமண் பெருமை நாட்டப்
புறப்பட்டுக் களங்கள் வென்று
சிறந்தவன் சிறையில் நொந்து
இறந்ததை மேற்கிற் கண்டோம்!!

# மங்கையர் மஞ்சரி

## விண்வெளி வீரனை சந்திரனுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்ட பர்பரா

இல்லினேஸ் பல்கலைக் கழகத்தில் 1946ம் ஆண்டு பொறியியல்பட்டம் பெற்ற முதல் பெண்மணியான பர்பரா குரோபோர்ட் ஜோன்சன் தமது தொழில் வாழ்வின் பெரும்பகுதியை விண்வெளி வீரரை சந்திரனுக்கு அனுப்பி அவரைப்பத்திரமாக பூமிக்கு கொண்டுவரும் முயற்சிகளில் கழித்தார்.

விண் வெளித் திட்டத்தின் ஆரம்ப வருடங்களில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட அனைவருமே ஆண்கள்.

1978ம் ஆண்டின் முற்பகுதியில் பெண்களும் இதற்கு தெரிவாகினர். கலிபோர்ணியாவில் உள்ள ரேக்குவல் சர்வதேச விண்வெளிப் பிரிவின் ஒரு பகுதி நிர்வாகியாகப் பணி புரிந்த இவர், அப்போலோ பயணங்கள் ஸ்கைலாப் அப்பலோ. சொய்ஸ் பரீட்சார்த்த திட்டங்கள் ஆகியவற்றின் மாதிரி அமைப்புக்கள் செயற்பாடுகள் ஆகியவற்றிற்கு பொறுப்பான அதிகாரியாகவும் விளங்கினர்.

முதலாவது சந்திரமண்டலப் பயணத்தின் திட்டசெயல்பாடுகளுக்கு பர்பரா ஆற்றிய சேவையைப் பாராட்டுமுகமாக 'நாஸா' பதக்கம் அணிந்து கௌரவிக்கப்பட்டார். அத்துடன் பெண் பொறியியலாளர் சங்கத்தின் சாதனைப் பரிசு உட்பட ஏராளமான கௌரவப்பட்டங்களையும், பரிசுகளையும் பாராட்டுகளையும், பர்பராகுரோபோர்ட் ஜோன்சன் பெற்றிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

—லக்ஷ்மி

## எண்ணெய்க்கறை

எண்ணெய் கறை துணியில் பட்டதும் உடனே அந்த இடத்தில் தலைக்குப் போடுல் ஷாம்பு கொண்டு முதலிம் கசக்கிவிட்டுப் பிறகு வழக்கம் போல் சோப்புபோட்டு துவைத்துவிட்டால் எண்ணெய் கறை நீங்கிவிடும்.

ஃ ஃ ஃ

எலுமிச்சம் பழத்தோலை நன்ருக காயவைத்து பீரோவில் போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.

## முதலாவது நூல்

உலகத்திலே சமையல் கலை பற்றிய முதலாவது நூல் சுமார் 4700 ஆண்டுகளுக்கு முன் சீனுவில் வெளியானது. அந்த நூலின் பெயர் 'ஹொன்சோ' அதனை எழுதியவர் ஷென்னும் என்னும் சீன சர்க்கரவர்த்தி.

## வீட்டுக் குறிப்புகள்

வாரம் ஒருமுறை செம்பருத்தி இலையை அரைத்து தோய்த்து நீராடினுல், தலைமுடி நன்ருக வளரும். ஷாம்பு போட்டதுபோல் முடிமென்மையாக பட்டுபோல் இருக்கும்.

0 0 0

கடுகு உபயோகிப்பதை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். கடுகு எப்படி உபயோகித்தாலும் இரத்த அழுத்த நோய்வரும். இரத்தக் கட்டி ஏற்படவாய்ப்புண்டு.

0 0 0

பச்சைமிளகாய் காற்று புகாத போத்தலில்போட்டு அத்துடன் சொற்பம் மஞ்சள் பொடியை போட்டு போத்தலை நன்ருகமூடி ஜன்னலின் அருகே வைத்துவிடுங்கள். இப்படி செய்தால் பச்சைமிளகாய் பழுத்துவிடாமல் பல நாட்களுக்கு பயன்படும்.

0 0 0

நமது உணவில் கீரையும், மோரும் இருந்தால் மலச்சிக்கல் ஏற்பட இடமில்லை.

0 0 0

வெந்தயத்தை அடிக்கடி உணவில் எந்தவிதத்திலாவது சேர்த்து வந்தால் நீரிழிவு நோய் ஓரளவு கட்டுப்படும்.

—சீதா

## சாதனை

சியோல் ஒலிம்பிக் போட்டியில 63 வயதான ஜப்பான் பெண்மணியும்இடம்பெற்ருர். சிக்குகோஇனேவி என்பது அந்தப் பெண்ணின் பெயராகும்.

* * *

பாரிஸ் நகரத்தில் நடந்த பெண்கள் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டெபி கிராபி சாதனை வெற்றி பெற்ருர்.

## தலைமயிரின் அமைப்பு வடிவம் மூலம் குணத்தை அறியலாம்!

பெண்களின் தலைமயிரின் அமைப்பு வடிவம், என்பன வற்றைக் கொண்டு பெண்களின் குண நடைகளையும் அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதையும் அறிந்து கொள்ள ஆசைப்படுகின்றீர்களா? இதோ படியுங்கள்.

ஃ பெண்ணின் தலைமயிர் கருமையாக, நீளமாக மென்மையானதாக அமைந்திருந்தால் அவள் குறைவற்ற வாழ்வில் மகிழ்ச்சியாயிருப்பாள்.

ஃ தலைமயிர் சுருள் சுருளாக அமைந்திருந்தால் அவ்வாறு அமைந்தவள் செல்வ வசதிகள் உடையவளாயிருப்பாள்.

ஃ தலைமயிர் நீண்டு விரிந்திருந்தால் அவள் கஷ்டத்திற்குள்ளாவாள்.

ஃ தலைமயிர் மழ, மழவென்றிருந்தால் அவள் பதிவிரதையும், தனவந்தியுமாவாள்.

ஃ தலைமயிர் அதிக நீளமுடையதாயிருந்தால் அவள் வெறுக்கப்படுாபவவளாள்.

ஃ செந்நிறமாக தலைமயிர் இருக்கப்பெற்றவள் தொல்லைப்படுபவளாவாள்.

ஃ குதிரை வால் போல மிருதுவாயிருந்தால் அவள் கணவனேடு நித்தம் சண்டையிட்டுக் கொண்டிருப்பாள்.

ஃ தலைமயிரின் முன்பாகம் கோணலாக இருந்து முகத்தில் பட்டுக்கொண்டிருந்தால் அவ்வாறு இருப்பவளுக்கு பாக்கியங்கள் உண்டாகும்.

ஃ தலையில் மயிர்கள் சுழிப்பட்டிருந்தால் அவள்வேதனைக்குரியவளாவாள்.

(சென்னை திருமகள் நிலைய கந்தகிரிதாஸன் வெளியீட்டாரின் ஆண், பெண் ஆக்கப்பலன்கள் என்ற நூலிலிருந்து.)

தொகுப்பு:
அளவையூர். ப. உதயகுமார்

### சமையல்பாகம்

## வாழைப்பழ லட்டு

தேவை: சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய வாழைப்பழம். 2 கப் சீனி. அரைக்கப் தேங்காய் துருவல் அரைகப், நெய் 2 ஸ்பூன், வெனிலா, எசன்ஸ் சிறிதளவு. உடைத்த முந்திரி 8—10. ஏலக்காய்—1.

சீனியை சிறிது தண்ணீர் விட்டு பாகுகாய்ச்சவும். லேசான கம்பி பாகுவந்ததும் தேங்காய்த் துருவல்போட்டு சுற்றி கிளறவும். பிறகு நெய், ஏலப்பொடி முந்திரி எசன்ஸ் சேர்த்து கடைசியில் வாழைப் பழத் துண்டுகளைப் போட்டு கிளறவும். நன்கு கட்டியாகி இறுகியவுடன் எடுத்து (இலேசான சூட்டில்) சிறிசிறு துண்டுகளாக பிடிக்கவும். இது சாப்பிட சுவையாக இருக்கும்.

—ராணி

## பெற்ருேர் போற்றும் பெண்கள்

அன்னையின் அன்பு மகளாக பிதா பெருமைப்படும் நல்ல மகளாக சகோதர சகோதரிகள் மெச்சிப் புகழும் சகோதரியாக பெண்கள் இருக்கவேண்டும். தன் நிலைமைக்கு மீறிப் பொருட்களுக்கு ஆசைப்பட்டு

(9 ம் பக்கம் பார்க்க)

## உலகின் ஏழு அதிசயங்கள்

### எகிப்திய பிரமிட்டுகள்

இது 5000 வருடங்களுக்கு முந்தியது. இதனை அமைப்பதற்கு 2,300,000 கற்துண்டுகள் பயன்பட்டன. ஒரு லட்சம் மனித வலுவினுல் 20 வருடங்களில் இப்பிரமிட்டுக்கள் பூர்த்தியாக்கப்பட்டன.

### தொங்கு தோட்டம்

பபிலோனிய மன்னனுகிய நெபுசாட் நேசர் என்பவன் தன் மனைவிக்காக ஆரும் நூற்ருண்டில் அமைக்கப்பட்டது. இத்தொங்கு தோட்டத்திற்கே செயற்கை நீர் அடிமைகள் மூலம் பாய்ச்சப்பட்டது. விதவிதமான பூஞ்செடிகள் இங்கே காணப்பட்டன. கூம்பு வடிவானதும் ஐந்து மாடங்களைக்கொண்ட இத்தோட்டம் இன்று பாரசீகரின் படையெடுப்பால் சிதைந்து காணப்படுகிறது.

### ஒலிம்பியா ஜிப்பிட்டர் சிலை

பிடியாஸ் என்ற சிற்பியால் ஒலிம்பியாவில் உள்ள ஆலயத்தில் இச்சிலை அமைக்கப்பட்டது. இது தங்கம் யானைத்தந்தம் போன்ற விலையுயர்ந்த பொருட்களினுல் உருவாக்கப்பட்டது. இச்சிலையைப் பார்த்தால் எத்தகைய மனக்கவலையும் பறந்து போய்விடுமென நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர். கி. மு. ஐந்தாம் நூற்ருண்டில் மிலேச்சரால் ஒருபகுதி அழிக்கப்பட எஞ்சிய பகுதி பூகம்பத்தால் அழிந்துவிட்டது.

### டயனு கோவில்

துருக்கியிலுள்ள எம்பீஸஸ் என்ற நகரிலுள்ள இக்கோவில் டயனு என்ற தேவதைக்காக அமைக்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்காக அந்நகரத்துப் பெண்கள் தங்கள் நகைகளை விற்று அன்பளிப்புச்செய்தனர். மகா அலெஸ்சாண்டர் தன் ஒலியன்ற உதவிகளை இக்கோவிலுக்காகச் செய்தான் கி. மு. 700 இல் ஆரம்பிக்கப்பட்டு கி. மு. 323 இல் பூர்த்தியாக்கப்பட்டு கி. பி. 3ம் நூற்ருண்டில் கொள்ளையரால் சூறையாடப்பட்டு அழிந்தது.

### மாசோல்ஸ் மன்னன் கல்லறை

பாரசீக சாம்ராஜியத்தின் ஒரு பகுதியை ஆண்ட மன்னன் மாசோல்ஸ் இறந்தபோது இவனது மனைவியான ஆர்த்தேமிசியா என்பவளால் அமைக்கப்பட்ட கல்லறையே இதுவாகும். கிரேக்க சிற்பவல்லுனரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லறை பூரணமாக முன்பு ஆர்த்தேமிசியா இறந்துவிட்டாள் 43 மீற்றர் உயரமான இக்கல்லறையின் முடியில் குதிரை ரதம் போன்ற அமைப்பும் அதில் மாசோல்ஸ்சினதும் மனைவியினதும் சிலைகளும் உள்ளன.

### ரேட்ஸ் பேருருவச்சிலை

சூரியக் கடவுளுக்கு வெண்கலத்தில் ஈஜியன் கடலிலுள்ள ரேட்ஸ் தீவில் அமைக்கப்பட்சிலை இதுவாகும். சாள்ஸ் என்றசிற்பிஇச்சிலையாக்கினுன். பின்னர் அதிலுள்ள தவற்றைக் கண்டு தற்கொலை செய்து கொண்டான். இச்சிலை 56 வருடங்கள் இருந்த போதும் பூமி நடுக்கத்தால் தொடர்ந்து நிலைத்து நிற்கவில்லை.

(9-ம் பக்கம் பார்க்க)

## பூகோளபுனைப்பெயர்களும் அவற்றிக்குரிய நாடுகளும்

| | | |
|---|---|---|
| மோட்டார் கார் நகரம் | — | டிற்ருெயிற் |
| பரிசுத்த நகரம் | — | ரோம் |
| இருண்ட கண்டம் | — | ஆபிரிக்கா |
| கோ மேசுகத்திவு | — | அயர்லாந்து |
| சூரியன் உதிக்கும் நாடு | — | ஜப்பான் |
| இந்து சமுத்திரத்தின் முத்து | — | இலங்கை |
| நள்ளிரவுச் சூரிய நாடு | — | நோர்வே |
| ஐரோப்பிபாவின் நோயாளி | — | துருக்கி |
| உலகின் கூரை | — | பமீர் |
| சீனுவின் துயரம் | — | குவாங்கோ |
| கண்ணீரின் கதவு | — | பேபல்மண்டெ நீரிணை |
| ை நல் நதியின் கொடை | — | எகிப்து |
| தெற்கின் இராணி | — | சிட்னி |
| வெள்ளை மனிதனின் கல்லறை | — | ஆபிரிக்காக் கரையின் கினியா |
| ஐரோப்பியாவின் விளையாட்டு மைதானம் | — | சுவிஸ்லாந்து |

தொகுப்பு
ஆ. வெங்கட றமணன்
யாழ்.மத்திய கல்லூரி

# மாணவர் மன்றம்




நீதிபதி: உமது வகுப்பு மாணவனை ஏன் இரும்புக்கம்பியால் தாக்கினீர்?

ஆசிரியர்: அந்த நேரம் பிரம்பு அகப்படவில்லை ஐயா.

ஃ ஃ ஃ

சர்வர்: கெதியாகக் சாப்பிடுங்கள்.

சாப்பிட வந்தவர்: ஏன் கடை பூட்டப்போகிறீர்களா?

சர்வர்: இல்லை, காற்றுத் தொடங்கிவிட்டது. இலையிலுள்ள 'தோசை' பறந்துவிடும்.

வி. பிரான்சிஸ்

## பசியுள்ள நரி

பசியால் அலைந்து நரியொன்று
பழத்தின் தோட்டம் சேர்ந்ததுவே
பசிய திராட்சைப் பழக்குலைகள்
இசைய மனதைச் கவர்ந்தனவே

இதுவே எனக்கு நல்லுணவு
என்று பழத்திற் பாய்ந்ததுவே
அதிக உயரம் பாய்ந்ததுவே
ஆன மட்டும் பாய்ந்ததுவே

எட்டி எட்டிப் பாய்ந்ததுவே
கிட்டிக் கிட்ட முடியவில்லை
எட்டா உயரம் இருந்தபழம்
தொட்டுப் பிடுங்க முடியவில்லை

சீச்சி புளிக்கும் இது வேண்டாம்
செல்வேன் வேறிடம் என்றதுவே
வாய்ச்சால் கயவர் நல்லதென்பர்
வாய்ப்பில் கெட்டது என்றுரைப்பர்

— மூத்துக்கிருஷ்ணர் இராமச்சந்திரன்

### வளர்த்த நாய் யமனுனது!

# தந்தையும் மகளும் பலி;

# மற்றுமொரு மகளும் பாதிப்பு!

## நாயைக் கடித்து தப்பினுர் துறைமுக ஊழியர்

வளர்த்த கடா மார்பில் பாய்ந்து விட்டதே! என பலர் மனம் கலங்கி ஏங்கும் நிகழ்வுகள் பலவற்றை நாம் வாழ்க்கையில் சந்திக்கின்ருேம். ஆயினும் வளர்த்த நாய் ஜமனுக மாறி எசமானே மாத்திரமன்றி அவரது ஆசை, அருமைப் புதல்வியையும் யமலோகம் அனுப்பி மனேவியாகவும், தாயாகவும் இருபக்க நிலேயில், தாளாத கவலேயால் தவித்துக் கண்ணீர் வடிக்கும் திலகமிழந்த சிரியாணி திலகலதாவின் சோகக்கதையை கேட்டால் உருகாத மனமும் உருகும்.

கொழும்பு முகத்து வாரத்தில் நிகழ்ந்த இச் சோக சம்பவம் ஒருபுறமிருக்க, கணவனுடன் துறைமுகத்தில் இணைந்து பணியாற்றிய ஜி. எல். ஜினதாசா (வயது 53) என்பவரையும், இதே விசர் நாய் துரத்தி அவரது கையைக் கடித்தபோது, நாயின் கழுத்தை அவர் திருப்பிக் கடித்து அதன் கோரப்பிடியிலிருந்து விடுபடவேண்டிய விபரீதமான அவலமும் நிகழ்ந்துள்ளது. தெய்வாதீனமாக ஜினதாசா உயிர் பிழைத்து விட்டார்.

### மத்திய கிழக்கிற்கு

தனது குடும்பத்தை சீரான நிலேக்கு உயர்த்தவேண்டும் என்ற இதயதுடிப்புடன் கண் கண்ட கணவனேயும், புதல்விகளேயும், விட்டுப்பிரிந்து மத்திய கிழக்கு குவைத் நாட்டுக்கு நீண்ட பயணம்மேற்கொண்டு போன 35 வயது மனேவி சிரியாணி திலகலதா மீண்டும் தாய் நாட்டுக்கு கடந்த டிசம்பர் மாதம் வந்து சேர்ந்த போது கிடைத்த பரிசு கணவன் கண்காணுத மறுலோகம்

**- மயூரன் -**

போன செய்தி மட்டுமல்ல கண்ணின் மணியாக வளர்ந்த தனது 15 வயது பருவ மகளும், தந்தையுடன் இணைந்து இவ் உலகை விட்டு போன தாங்க முடியாத தவிப்பான காட்சிகள்தான்.

காதலுக்கு கண்ணில்லே என்பார்கள் அதேபோல பாச நேசத்திற்கும் வரையறவே கிடையாது. மனித ஜீவன்களேப்போல மிருகங்களேயும் வீட்டுக்கு உற்ற காவலனுகவும், தோழனுகவும் நினேத்து வளர்த்து, பாசத்தைக்கொட்டி பழகும் நாய்களினுல் படுமோசமான விபரீதங்கள் விளேயும் போது நாம் கதிகலங்கிப் போய்விடுகின்ருேம்.

### நாயை வளர்த்தார்

இத்தகைய விபரீத விளேவுகளே கற்பனேயிலும் நினேத்து பார்க்காத கமகே சோமதாசாவும், வீட்டுக்கு உற்ற தோழனுகவும், காவலனுகவும் ஒரு நாயை வளர்த்து வந்தார்.

### நிழல்போல் செல்லும்

அவரது அந்த செல்ல நாய், வீட்டில் மாத்திரமன்றி, வேலேக்குச் செல்லும் போது அவரோடு நிழல்போல பின் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்துக்கு சென்று திரும்புவது வழமைதான்.

ஆனுல் தன் விதியோடு விளேயாடும், அன்றைய தினமான கடந்த டிசம்பர் 12ம் திகதி நாய்க்கு ஏற்பட்ட விசர் நோய் காரணமாக தன்னே வளர்த்த எசமான் என்று கூட நினேக்க முடியாத நிலேயில், சோமதாசாவை கடித்தது, மாத்திரமல்ல வேறு பல துறைமுகத் தொழிலாளர்களேயும் பதம் பார்த்தது.

### தடுப்பூசி போட்டார்

தான் வளர்த்த நாய்தானே கடித்தது என்று சோமதாசா வாளா இருக்கவில்லே. உடனடியாகவே ஆஸ்பத்திரிக்குச் சென்று விசர்நாய்க்கடி தடுப்பூசி போட்டது உண்மை! அதேபோல தொடர்ந்து ஊசி போட ஆஸ்பத்திரியில் ஊசி மருந்து வசதி கிடைக்காத அவலம் நேர்ந்ததும் உண்மை! —இதன் விளேவு— நாய்கடித்த ஏழாம் நாள் சோமதாசா உயிரிழந்தார். சோமதாசா உயிரிழந்த செய்தி குவைத்தில் வேலேபார்த்து வந்த மனேவி திலகலதாவுக்கு மூடி மறைக்கப்பட்டது ஆயினும் ஒரு முறை வீட்டுக்குவந்து போகும்படி குடும்பத்தினரிடமிருந்து கடிதம் கிடைத்தது. வேலே ஒப்பந்தக் கெடுபிடி காரணமாக மூன்று மாதங்கள் கழித்து மார்ச் மாதத்தில் ஏதும் அறியாது பறந்தோடி வந்தாள்.

மூன்று மாதங்கள் கழித்து வந்த திலகலதா கணவன் இறந்த செய்தி கேட்டு துடிதுடித்துப் போனுள்.

தாங்கமுடியாத இழப்பில் தவித்த மனேவிக்கு இரண்டாவது மகள் சுஸிவாவையும், துர்ப்பாக்கிய, வீட்டுவிசர் நாய் ஏற்கனவே கடித்திருந்த செய்தி தெரிந்திருக்கவில்லே.

### மற்ருெரு பேரிடி

மார்ச் மாதத்தில் வந்த திலகலதாவுக்கு ஏப்பிரல் மாதத்தில் மற்றுமொரு பேரிடி மகள் மூலம் காத்திருக்கிறது என்பதை எப்படி அறிவாள்.

முன்னரே விசர் நாய்க்கடிக்குள்ளாகியிருந்த மகள் சுஸிவா ஏப்பிரல் 30ம் திகதி திடீரென சுகவீனமுற்று, உடல் குளிர்

(10ம்பக்கம் பார்க்க)

### பெற்ருேர்போற்றும்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ருேரை துன்பத்தில் ஒரு பெண் ஆழ்த்தக்கூடாது. வீட்டில் மற்றவர்களின் தேவைகளேப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளேச் செய்வதில்தான் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஒருபெண்ணேத் தங்கள் வீட்டுப்பெண் என்று சொல்லிக்கொள்வதில், குடும்பத்தினர் அனேவரும் பெருமைப்படும் விதமாக நடந்துகொள்ளவேண்டும்.

வீட்டிற்கு யார் யாரைத் தேடிவந்தாலும் வீட்டிலிருக்கும் பெண்தான் வரவேற்பாளராக இருக்கவேண்டும். சமூக வாழ்வின் எந்தநிலேயில் உள்ளவர் எப்படி வந்தாலும் சரி, வீடுதேடி வந்த அவரிடம் மரியாதைகாட்டி, அவர் மகிழும் வண்ணம் நடக்கவேண்டும். எவ்வளவு வேலேயிருந்தாலும், அவருடன் இன்முகங்காட்டி சில வார்த்தைகள் பேசிவிட்டுத்தான் போகவேண்டும்.

தினமும், அறையிலோ, ஹாலிலோ உட்கார்ந்து வீண் பொழுதை போக்குவதை விட்டு, தாய்க்கு அவளின் வேலேகளில் உதவுவது மகளின் முக்கிய கடமையாகும்.

பெண்கள் வீட்டை அலங்கரிப்பதிலும், துப்பரவாக வைத்திருப்பதிலும். கவனம் செலுத்தவேண்டும்.

தான் எவ்வளவுதான் படித்திருந்தாலும், பெற்ருேரைக் கலந்தாலோசிக்காமல் பெண் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. வீட்டுக்கு தேவையான உடுப்புகளே வீட்டிலேயே தைத்துவிடுவதன் மூலமும், பெண் குடும்பத்திற்கு உதவலாம். நாகரிகம் என்று பெற்ருேருக்கு இஷ்டமில்லாத வேலேகளே பெண்கள் செய்யக்கூடாது,. தியாகம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பெண்களுக்கு இருக்கவேண்டியது அவசியம்.

பிறந்த வீட்டின் பெருமை விளக்காக பெண்திகழவேண்டும்.

—மஞ்களா

### விலங்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயை ஒருவருக்கு உண்டாகாது தடுப்பதுதான் ஒரே வழி. விலங்கு விசர் பரவாது தடுப்பதற்கு மக்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

1. இது பெரும்பாலும் நாய்களிற்கு உண்டாகும் நோய். ஆகவே நாய்களுக்கு இந்நோய் வராது தடுக்க முடியுமாளுல் இந்நோய் மனிதருக்குப் பரவாது தடுக்கமுடியும்.

2. வீடுகளில் வளர்ககின்ற எல்லா நாய்களுக்கும் குறிப்பிட்ட இடைவெளியில் விலங்கு விசர் தடுப்பு ஊசி ஏற்றவேண்டும்.

3. தடைஊசி போடப்படாத உரிமையாளர்கள் இல்லாத நாய்கள் யாவும் அழிக்கப்படவேண்டும்.

4. விலங்குவிசர் தடுப்புஊசி, சகல வைத்தியசாலேகளிலும் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

### உலகின் ஏழு

(8ம் பக்கத் தொடர்ச்சி)

### அலக்சான்திரிய கலங்கரை விளக்கம்

பண்டைய உலகின் முதற் கலங்கரை விளக்கம் இதுவாகும். கி. மு 2ம் நூற்ருண்டில் வெள்ளேச்சலவைச்கல்லால் எட்டு மாடங்களேக் கொண்டதாக அமைக்கப்பட்டது. மத்திய தரைக்கடலில் இது 46 km தூரத்திற்குத் தெரிந்தது. அராபியர் எகிப்தைக் கைப்பற்றிய பின்னர் கொன்தாந்தி நோபிளில் இருந்த சக்கரவர்த்தி இக்கலங்கரை விளக்கத்தின் கீழ் தங்க ஆபரணங்கள் இருப்பதாக நம்பச்செய்து அதனேஇடிக்கச் செய்தான். இடை நடுவில் உண்மையை உணர்ந்த அராபிய மன்னன் அதனே மீண்டும் நிர்மாணிக்க முயன்றும் பலனடையவில்லே. 1375 இல் இதன் எஞ்சிய பகுதி பூகம்பத்தில் மறைந்து விட்டது.

சாந்தினி கந்தசாமி
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

## கிழக்கு மாகாணத்தில்

# நடந்துவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்

எமது பாரம்பரிய 'மரபு வழித் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசாங்கத்தினுலும் அரசாங்க சார்புடைய நிறுவனங்களினுலும் திட்டமிட்டப்பட்டு கடந்த நாற்பத்திரண்டு வருடங்களாக சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட்டு வந்துள்ளது என்பது வெளிப்படை.

1948ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்டம் அவ்வாருன திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களில் ஒன்ருகும்.

பட்டிப்பளே ஆறு, அம்பாள் ஏரி என்னும் தமிழ்ப் பெயருள்ள இடங்களே கல்லோயா, அம்பாறை என சிங்கள மருவிய பெயர்களேச் சூடினுர்கள். பட்டிப்பளேஆறு பாய்ந்தோடிப்பசுமையூட்டிய முக்கிய பகுதிகளே ஏமாற்றி பறித்து அபிவிருத்திப் போர்வையில் கல்லோயா என்று சிங்களப் பெயரை இலங்கையின் முதற் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா சூட்டினுர்.

பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசமான கிழக்கில் திட்டமிட்டுச் சிங்கள மக்களே குடியேற்றும் நடவடிக்கை 1949ஆம் ஆண்டு இலங்கையின் முதற் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவினுல் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தமிழர்களின் பாரம்பரிய நிலப்பகுதிகளில் தமிழர்களே ஒழித்துக்கட்டுவதே இந்தத் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும்.

கல்லோயாஆறு மத்திய மலேநாட்டிலே உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்ந்து அக்கரைப்பற்றுக்கு அண்மையாகக் கடலோடு கலக்கின்றது. இது 100 கிலோ மீற்றர் வரை நீளமானது. இங்கினியாகலே என்னும் இடத்தில் கல்லோயாஆற்றுக்குக் குறுக்கே

**மா.அ.கி.துரைநாயகம்**

பெரியதோர் அணேக்கட்டு ஒரு பெரும் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 30 சதுர மைல் பரப்புக் கொண்ட இந்நீர்த்தேக்கம் சேனநாயக்கா சமுத்திரம் எனப்படும்.

கல்லோயாத் திட்டத்தின் வாயிலாக சிறுபோகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிர் செய்யப்படுகின்ற 60,000 ஏக்கர் நிலத்திற்கு நீர் வழங்கப்படுகின்றது.

கல்லோயாத் திட்டத்தின்கீழ் மொத்தம் 48393 ஏக்கர் நிலம் பராதீனப்படுத்தப்பட்டு 16,890 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. மேலும் கிராமங்களே விரிவாக்கும் திட்டத்தின்கீழ் 2000த்துக்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. அறுபது புதிய கிராமங்களேயும் வளர்ந்துவரும் பதினேந்து புதிய நகரங்களேயுமுடையதாக இப்பிரதேசமுள்ளது.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி இங்கினியாகலேயில் இனக்கலவரம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து தமிழ்க்குடியேற்றவாசிகள் சிங்களக் காடையர்களால் துரத்தியடிக்கப்பட்டும், சிலர் கொல்லப்பட்டார்கள். இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழ்க் குடியேற்றவாசிகள் குடியேற்றக் கிராமங்களுக்குச் செல்லவில்லே. இந்தக் குடியேற்றக் கிராமங்களிலும் பின்னர் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1958ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பமாகிய இனக்கலவரத்திலும் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடியேறிய தமிழ்க் குடும்பங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டார்கள்.

1959ஆம் ஆண்டு தேர்தற் தொகுதி நிர்ணய ஆணேக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் மட்டக்களப்பின் தென் பகுதியிலுள்ள கல்லோயாத் திட்டத்தின் மூலம் சிங்கள மக்கள் குடியேறறததால அம்பாறை என்னும் சிங்களத் தேர்தற் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டது.

1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனிச் சிங்களத் தொகுதியான அம்பாறையில் சிங்களப் பிரதிநிதி ஒருவர் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்ருர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டத்தின் மூலம் பத்தாண்டுகளுக்குள் ஒரு சிங்களத் தொகுதி கிழக்கு மாகாணத்தில் உருவாகிற்று. இந்தத் தொகுதியே மாவட்டம் உருவாகுவதற்கும் வழி சமைத்துக் கொடுத்தது.

1961ஆம் ஆண்டு பெப்ரவரி 20-ம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 17-ம் திகதி வரை வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள அனேத்துக் கச்சேரிகள் முன்பாகவும் சத்தியாக்கிரக இயக்கம் நடைபெற்றது. இலங்கை அரசின் ஆட்சி செயலிழந்து காணப்பட்டது.

இதனேத் தொடர்ந்து அம்பாறை, கல்முனே, நிந்தாவூர், பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளே உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகத்தினுள் இருந்து அகற்றி, அந்த நான்கு தேர்தல் தொகுதிகளேயும் உள்ளடக்கிய பிரதேசத்தை அம்பாறை மாவட்டமாக 1961ஆம் ஆண்டு இலங்கை அரசு உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. அம்பாறை மாவட்டத்தின் கச்சேரி அம்பாறைநகரில் கட்டப்பட்டது. அம்பாறை மாவட்ட நிர்வாகம் சிங்கள மொழி மயமாக்கும் முயற்சிக்கு இது கால்கோளாக அமைந்தது. 1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஐந்துபிரிவுகாரி

(10ம் பக்கம் பார்க்க)

# நல்லூரை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

புரம் எனப் பெயர்பெற்றது. இந்நல்லூரில் 'சரஸ்வதி மகா ஆலயம்' என்ற பெரிய நூல் நிலையம் அமைந்ததோடு, சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ்ச் சங்கம் அமைத்த இடமாகவும் இது விளங்கியது. போர்த்துக்கேயர் தளபதியாகிய டீ ஒலிவைரு யாழ்ப்பாண மன்னனைத் தோற்கடித்த பின்னர் 1621 வரை நல்லூரிலேதான் தனது அரசிருக்கையை அமைத்திருந்தான். 1621இற்றான் தற்காலக் கோட்டைக்குத் தலைநகர் மாற, தற்கால யாழ்ப்பாண நகரமும் உருப்பெற்று வளரத் தொடங்கியது. டச்சுக்காரர் காலத்தில் சுதேசிகளுக்குக் கல்வி புகட்ட நல்லூரில் ஒரு கல்விக் கூடம் (செமினறி) அமைக்கப்பட்டது. இதன் கட்டிடம் தற்கால யமுனேரிக்கு அருகிலேதான் அமைந்திருந்தது.

இத்தகைய சிறப்புக் கொண்ட நல்லூர் விட்ட அழிபாடுகளுக்கு என்ன நடந்தது என்றகேள்வி எழுகிறது. சிங்கள அரசின் தலைநகர்கள் நல்ல கருங்கற்களால் அமைக்கப்பட்டதால் இன்றும் அவற்றின் அழிபாடுகள் உல்லாசப் பிரயாணிகளைக்கவர்ந்து கொண்டிருக்கின்றன. பொலநறுவை வீழ்ச்சியோடு சிங்கள அரசின் தலைநகர்கள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர இவ்விடங்கள் காடடர்ந்த பகுதியாகின. ஆங்கிலேயர் வருகையோடு கடந்த நூற்றாண்டிற்றான் இவை மீளவும் கண்டுபிடிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டன. எனினும் சுதந்திரத்தின் பின்னரும் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் இப்பகுதிகளைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவும் தவறவில்லை. இத்தகைய நடவடிக்கைகளாற்றான் இவற்றின் அழிபாடுகள் இன்றும் நிலைத்திருக்கின்றன.

நல்லூரைப் பொறுத்தமட்டில் இதன் அழிபாடுகள் பல இன்று மறைந்து விட்டனவே எனலாம். கருங்கற்களைக் கொண்டு கட்டிடங்களை அமைப்பதற்கானவாய்ப்பு யாழ்ப்பாணத்தில் இல்லை. பெரும்பாலும் செங்கட்டிகளும், சுண்ணாம்புக் கற்களுமே கட்டிடங்களை அமைக்கப் பயன்படுத்தப்பட்டன. போர்த்துக்கேயர் நல்லூரைத் தரைமட்டமாக்கியதோடு இக்கட்டிடப் பொருட்களை தற்கால யாழ். கோட்டையை அமைக்கவும் பயன்படுத்தினர். போர்த்துக்கேயர் அழிவுக்குப் பின்னர்இப்பகுதிகை விடப்படவில்லை. மக்கள் குடியேற்றம் தொடர்ந்தும் இங்கு காணப்பட்டதால் பல தொல்லியற் சின்னங்கள் அழிக்கப்பட்டன. பூதராயர் ஆலயத்தின் குளத்திற் கிடைத்த வெண்கலத்தில் அமைந்த முருகனதும் அவனது தேவியரதும் விக்கிரகங்களும் சட்டநாதர் ஆலயத்திற்குக் கிட்டக்கிடைத்த கருங்கல்லிலமைந்த முருகன், தேவியர் விக்கிரகங்கள், தட்சிணாமூர்த்தி, விக்கிரகம் சனீஸ்வரன் விக்கிரகம், பிள்ளையார் விக்கிரகம் போன்றனவற்றைத் தவிர நல்லூர்த் தலைநகரில் அமைந்த ஆலய வழிபாட்டின் எச்சங்கள் நமக்குக்கிடைக்கவில்லை. செப்புப்பட்டயங்கள் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை பிரஸ்தாபித்தாலும் நம்மவர் கையில் இவை சிக்கித் திரவப் பொருட்களாகிவிட்டன. போற்றெரிகிறது. எஞ்சி இருப்பவை இவ்வரசின் நாணயங்கள் மட்டுமே. இவற்றின் ஒரு பக்கத்தில் மன்னன் உருவமும் மறுபக்கம் யாழ்ப்பாண புனிதச் ஆரியச் சக்கரவர்த்திகளின் சின்னமாகிய ராமேஸ்வரம் பகுதியைக் குறிக்கும். சேது என்ற பெயரும் அதனோடு கூடிய நந்தியுமே காணப்படுகிறது. தமிழ் வடிவமான சேதுவும் நந்தியுமேஎஞ்சியுள்ள சின்னங்கள். இத் தமிழரசின் கொடிகூட நந்திக் கொடியே. மந்திரி மனையும் இதற்குக் கிட்ட உள்ள நுழைவாயிலும் டச்சுகாரரால் புனரமைக்கப்பட்டதை இவற்றின் கட்டிடப் பாணி உணர்த்துகின்றது எனலாம்.

தமிழீழப் பிரச்னை பாராளுமன்றத்தில் விஸ்வரூபமெடுத்த போது உங்கள் அரசு இருந்ததற்கான தொல்லியற் சின்னங்களைக் காட்டுங்கள் என்ற ஒரு குரல் அன்று பாராளுமன்றத்தில் ஒலித்ததைப் பத்திரிகைகள் பிரசுரித்ததும் வரலாறு. இதனால் தமிழர் தாயகத்தின் பழமையிலும் பாரம்பரியத்திலும் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் நாணயங்கள்தான் நம்மரசின் எச்சங்கள் என்றிராது இவ்வரசின் தலைநகரை அழியாது பாதுகாக்கும் பணியே தமது தலையான பணி எனச் செயலாற்றும் காலம் வந்துவிட்டது என்று கூறினால் தவறன்று.

# மொரிசியசு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## 200 துறைமுக தொழிலாளர்

கொள்கலன்களை ஏற்றி இறக்குவதற்கான வசதிகளும் அவற்றை இறக்கிவைப்பதற்கான பெரும் பிரதேசமும் அங்கு உண்டு. இங்குள்ள சரக்குகளை ஏற்றி இறக்குகும், மற்றும் துறைமுக வேலைகளுக்கும்சுமார் 200க்கு அதிகமான துறைமுகத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். துறைமுகத்தின் உள்ளே அமைந்திருக்கும் அதிகார சபை மூன்று மாடிக்கட்டிடங்களைக் கொண்டது. சகல நிருவாக அலுவலகங்களும் அங்கு அமைந்திருக்கின்றன.

இத்துறைமுகத்தின் ஆளணி முகாமைமையாளராகவும், தலைமைப் பொறியியலாளராகவும் இருப்பவர்கள் தமிழர்களே. கணிசமான அளவு தமிழ்த் தொழிலாளர்களும் பணி புரிகின்றனர். இத்துறைமுகத்தில் ஆளணி முகாமையாளராகப் பணி புரியும் திரு. கோவிந்தர் கொழும்புத்துறைமுகத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இங்கு 9 இறங்கு துறைகள் உண்டு. இரு வத்தை, மூலம் சரக்குகளை இறக்கும் துறைகளும் உண்டு. நீளமானதும், ஆழமானதுமான கப்பல்கள் இக்கரைக்கு வந்து நின்று சரக்குகளை இறக்குகின்றன. ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 460, 000 மெற்றிக் தொன் சரக்குகள் இங்கு கையாளப் படுகின்றன.

கொழும்புத் துறைமுகத்தில் ஒரு கொள்கலனை இறக்குவதற்கு ஈடுபடுத்தப் படும் வேலையாள்குழு தொகையினர் போன்று போட்லுயிஸ் துறைமுகத்தில் மிகக் குறைந்த தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

கொழும்புத் துறைமுகத்தைப் பார்க்கச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கடும் பரிசோதனை போல் ஏதும் போட்லூயிஸ் துறைமுகத்தில் இல்லை. எவரும் இலகுவான முறையில் துறைமுகத்தைச் சென்று பார்வையிட முடியும்.

இத்துறைமுகத்தை முழுமையாகப் பார்ப்பதற்கு ஆளணிமுகாமையாளர் திரு. கோவிந்தர் மிக உதவிபுரிந்தார். அவர் இலங்கைத் துறைமுகத்தினை வந்து பார்ப்பதற்கு ஆவல் கொண்டுள்ளார்.

(தொடரும்)

# கிழக்கு மாகாணத்தில்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

யாதிகாரிகள் பகுதிகள் இருந்தன. பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, கரவாகும் நிந்தாவூர் பற்றும், சம்மாந்துறைபற்று ஆகிய நாலு தமிழ்பேசும் காரியாதிகாரி பிரிவுகளும் வேவகம்பத்து என்று அழைக்கப்படும் சிங்களம் பேசும் காரியாதிகாரி பிரிவும் காணப்பட்டன.

1963ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் படி அம்பாறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 2 லட்சத்து 11732 பேர் ஆகும். இதில் சிங்களவர்களின் எண்ணிக்கை 61996 ஆகும்.

1949ஆண்டு தொடங்கி 1963ஆம ஆண்டு வரை கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடியேற்றப்பட்ட சிங்களவரின் எண்ணிக்கை தெட்டத்தெளிவாகின்றது.

அம்பாறை மாவட்டம் உருவாகிய பின்னர் விசேஷமாக அம்பாறை தேர்தற் தொகுதி பிரதேசத்திலும் பொத்துவில் தேர்தற்தொகுதி பிரதேசத்திலும் சிங்கள மக்கள் அத்துமீறியும் குடியேறியுள்ளனர். அரச காணிகளில் சட்டத்தை மீறிக் குடியேறிய சிங்கள மக்கள் மீது இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அந்நிலங்களை அவர்களுக்கு சொந்தமாக்கியது. மங்கள ஓயா, குமண போன்ற இடங்களில் இவை நடைபெற்றுள்ளது.

தீகவாபியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு அவற்றின் மணியோசை கேட்கும் இடமெல்லாம் சிங்கள பௌத்த மக்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் குடியேற்றப்பட்டார்கள் இதனால்தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் சொந்த நிலங்களை இழக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

1971ம் ஆண்டு குடிசனமதிப்பீட்டின் படி அம்பாறையின் மொத்த சனத்தொகை 2 லட்சத்து 72605 ஆகும் அதில் சிங்களவர் 30% ஆகும்.

அம்பாறை மாவட்டத்தில் ஒரேயொரு நகரசபை உண்டு. அது அம்பாறை நகரசபையாகும். நகரசபையின் எல்லைக்குள் வாழ்ந்த தமிழர்கள் 1977ம் ஆண்டு, 1981ம் ஆண்டு, 1983ம் ஆண்டு நடைபெற்ற இனகலவரங்களில் 'பாதிக்கப்பட்டு நகரை விட்டு வெளியேறிவிட்டார்கள். இன்று ஒரு சில தமிழர்களே அம்பாறை நகரில் வசிக்கிறார்கள்.

ஹிங்குராணை சீனித்தொழிற்சாலைக்கு கரும்பு செய்கைக்காக அயலிலுள்ள தமிழ் பேசும் மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு நஷ்டஈடு இன்னும் கொடுபடவில்லை. அத்துடன் இந்நிலங்களில் சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் சிங்கள மக்கள் குடியேறி பயிர்செய்கையில் ஈடுபடுகிறார்கள்.

1980ம் ஆண்டு தேர்தல் சட்டத்தின் கீழ் அம்பாறை தேர்தல் மாவட்டம் திகாமடுல்ல என்ற பாளி மருவிய சிங்கள பெயருள்ள தேர்தல் மாவட்டமாக மாற்றப்பட்டது.

அம்பாறை எனும் சொல்லில் தமிழ் மருவிய சிங்களம் காணப்படுவதால் தான் இந்த மாற்றம் என்று கூறப்படுகின்றது.

1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி அம்பாறையில் மொத்த சனத்தொகை 3 லட்சத்து 88786 ஆகும். இதில் சிங்களவர் சனத்தொகை 1 லட்சத்து 46371 ஆகும். மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் சிங்களவரின் வீதம் 37.8% ஆகும் 1981 ஆம் ஆண்டு அம்பாறையில் பன்னிரண்டு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் இருந்தன. அதில் பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தாவூர், கல்முனை, சம்மாந்துறை ஆகிய ஏழு தமிழ் பேசும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும், வேவகம் பத்து வடக்கு, வேவகம்பத்து தெற்கு, லாகுகல, மகா ஓயா பதியதலாவ ஆகிய 5 சிங்களம் பேசும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் இருந்தன.

1983ம் ஆண்டுக்கு பிறகு இன்றுவரை அம்பாறைமாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் பதவியில் தமிழ் பேசும் மகன் இல்லை.

இலங்கை புதைபொருளாராய்ச்சி திணைக்களம் பழைய சுவடுகளை கிழக்கு மாகாணத்தில் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கின்றார்கள் எனின் உடனே அந்த இடத்தில் ஒரு பௌத்த பிக்கு மறுநாள் நிற்பார். சுவடுகளில் தில்லுமுள்ளுகள் காட்டி அந்த இடத்தில் உடனே பௌத்த விகாரை ஒன்றை கட்டியெழுப்ப முயற்சி எடுப்பார். அரசின் ஆதரவுடன் சில நூறு பௌத்த சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்படுவார்கள்.

தாந்தாமலை, உகந்தை முருகன் கோவிலில் ஆகியவற்றில் இப்படியான புதைபொருள் ஆராய்ச்சி தில்லு முல்லுகள் நடைபெற பார்த்தது ஆனால் அவர்களின் நோக்கம் கடைசி வரை நிறைவேறவில்லை.

அம்பாறை மாவட்டத்தின் பெரும்பகுதியான நிலப்பரப்புகள் இன்று மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அடங்குகின்றது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்படி அபிவிருத்தி செய்யப்படும் புதிய குடியிருப்புகளில் சிங்களவர் மட்டும் குடியேற்றப்படுகிறார்கள்.

இனிமேலும் இந்நிலைமை நீடித்தால், எதிர்காலத்தில் தமிழினத்திற்கு இடமில்லாமல் போய்விடும் என்பதை தமிழ்பேசும் மக்கள் மறந்து விடக்கூடாது.

# கைத்தொழில்

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

இரும்பு உற்பத்திகளுக்கே முக்கியத்துவம்கொடுக்கிறோம்.

கேள்வி; இவ்வளவு முன்னணியில் திகழ்ந்த தொழிற்சாலையின் உற்பத்திகள் தற்பொழுது ஏன் குறைந்துவிட்டன?

பதில்: இதற்குப் பல காரணங்கள். நாட்டுநிலைமை. அடிக்கடி நடைபெற்ற இராணுவத் தாக்குதல்கள், மற்றும் தொழிலாளர் பலர் அந்நிய நாடுகளுக்கு சென்று விட்டமை குறிப்பாக மத்திய நாடுகளுக்கும், ஏனைய ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ்,டென்மார்க் ஜேர்மனி, போன்ற நாடுகளுக்கு உழைப்பின் காரணமாகச் சென்று விட்டனர். இது எமது உற்பத்தியைப் பெருமளவுபாதித்து விட்டது.

இன்னொரு முக்கிய காரணம் எஞ்சிய தொழிலாளர் தாமே முதல்போட்டு தமது வீட்டிலேயே சிறுசிறு தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கின்றனர்.

கேள்வி: மீண்டும் இத்தொழிற்சாலையை முந்திய நிலைக்கு கொண்டுவர உத்தேசம் உண்டா?

பதில்; ஆம் நிச்சயம் உண்டு, நாட்டு நிலையும் தற்போது சீரடைந்து வருகிறது. வெளிநாட்டிற்குப் போன இளைஞர்களும் திரும்பி வந்து எமது தொழிற்சாலையில் வேலை செய்வார்களாயின் எமக்குஇன்னும் வசதியாக இருக்கும். மற்றும் சொந்தமாக தொழில் செய்வோரும் மீண்டும் எமது தொழிற்சாலையில் சேர்ந்து கடமையாற்றுவார்கள் என்ற நம்பிக்கை நிறைய உண்டு.

கேள்வி: தொழிற்சாலை நிர்வாகம் பற்றி ஏதாவது குறிப்பிடமுடியுமா?

பதில்; நிர்வாகம் என்று என்று கூறும் போதுமுகாமையாளர் என்ற பதவிஇல்லை. தலைவர், மேற்பார்வையாளர், கணக்காளர், லிகிதர், தொழிலாளர் என்ற மட்டத்தித்திலேயே செயற்பாடுகள் நடைபெறுகின்றன. தற்போது தலைவராக திரு. கணேசலிங்கம் செயற்படுகின்றார். உப தலைவராக திரு. பத்மநாதன் கடமையாற்றுகிறார். திரு. பத்மநாதன் முன்பு தலைவராக இருந்தவர். இத்தொழில் பற்றி நீண்ட அனுப்வம் உடையவர்.

கேள்வி; தொழிற்சாலையுடன் சேர்ந்து நூலகம் இயங்கியதாகக் கேள்விப்பட்டோம். உண்மையா?

பதில்; உழைப்பிற்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுத்தோமோ அதேயளவிற்கு அறிவுத்தேடலிற்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். இதனை சிறப்பாக எடுத்துக்காட்டும் வகையில் இருமாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டு வாசிக்கும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி என்பன சிறப்பாக இயங்கி வந்தன. ஆனால் 29-03-87 இல் நடைபெற்ற விமானத் தாக்குதலில் நூலகக் கட்டிடம் முற்றாக சேதமடைந்து விட்டது. மீண்டும் நூலக சேவை ஆரம்பிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. எதிர்கால நம்பிக்கை அவரின் வார்த்தையில் இழையோடுகின்றது.

பனிமூட்டங்கள் அகன்று துன்பச் சுமைகள் நீங்கி மீண்டும் காமாட்சியம்பாள் இரும்புத்தொழிற்சாலையும் நூலகமும் தமது சேவையை புதுமெருகுடன் ஆரம்பிக்க நாமும் வாழ்த்துவோம்.

## வளர்த்த நாய்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வடைந்து உடனடியாக கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அத்தினமே அவளும். தந்தையுடன் இணைந்து இவ்உலகை விட்டுப்பிரிந்தாள்.

**துணிகளை தழுவிய...**

இதன் தொடர் கதையாக, விசர்நாய்க் கடிக்குள்ளாகியிருந்த சுசிவாவின் துணிமணிகளை கழுவி உதவிபுரிந்த மூத்த மகளுக்கும் விசர் நோய்க்கான அறிகுறிகள் ஏற்பட்டன, தெய்வாதீனமாக அவள் பிழைத்துவிட்டாள்.

''வீட்டில் நிலவிய ஏழ்மையைப் போக்கி எனது குடும்பத்துக்கு சீரான வாழ்வை ஏற்படுத்தும் எண்ணிலா கற்பனைகளுடன் குவைத் நாட்டுக்கு போன எனக்கு ஏன் இந்தக் கொடுமைகளை தெய்வம் விடவேண்டும்'' என்று சிரியாணி திலகவதி கதறி அழுத காட்சியை கண்டு ஊரே கண்கலங்கி அழுதது.

—நன்றி 'வீக்கென்ட்'

## சொத்துக்கள்

ஏகப்பட்ட சொத்துக்களை வைத்திருப்பதிலும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு கடிகாரம் வைத்திருப்பவனுக்கு மணி என்ன என்று தெளிவாக தெரிகிறது. இரண்டு கடிகாரம் வைத்திருப்பவனுக்கு, நேரம் சந்தேகமன்றி தெரியாது.

—பெர்னாட் ஷோ

## வயிற்றுப்போக்கு

அதிகமாக வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடலிலுள்ள நீரெல்லாம் வெளியேறிவிடுகிறது. இதனை ஈடு செய்ய எலுமிச்சஞ்சாறு, இளநீர் குடிக்கச்செய்தால் நோய் நீங்கும்.

### இன்று நினைவுதினம்:

# ஈழத்து தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை திரு. சி. இராமலிங்கம்

திரு. சி. இராமலிங்கம் தெல்லிப்பளைக்கு அண்மையில் உள்ள தையிட்டிப்புலம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் தமது ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் பயின்றவர். அதைத் தொடர்ந்து தமிழகம் சென்று சிதம்பரம் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் திரு. எஸ். சுப்பிரமணியம் முறையிலான தமிழ் சுருக்கெழுத்தையும் மற்றும் ஆங்கில, தமிழ் தட்டச்சையும் பயின்றார். சென்னை அரசினரால் நடாத்தப்பட்ட தொழில்நுட்பப் பரீட்சையில் தமிழ் சுருக்கெழுத்துப் பாடத்தில் முதலாம் தரத்தில் சித்தி பெற்றார், பின்னர் தனது தாய் நாட்டிற்குச் சேவை செய்வதற்காக இலங்கை திரும்பினார்.

இவர் 1951ல் இலங்கை வானொலியில் தமிழ் தட்டெழுத்தாளராக கடமையாற்றினார். 1952ம் ஆண்டில் அரச கரும மொழித் திணைக்களத்தால் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சிக்குப் போதனாசிரியராக நியமிக்கப்பட்டார். அரச நிறுவனம் ஒன்றில் முதல் தமிழ் சுருக்கெழுத்துப் போதனாசிரியராகக் கடமையாற்றக் கிடைத்த பெருமை இவரையே சாரும். அங்கு அவர் 1959ம் ஆண்டு வரை கடமையாற்றினார். பின்னர் அப்பயிற்சி நிலையம் மூடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இவர் கொக்குவில் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் (தற்போது யாழ்ப்பாணம்தொழில்நுட்பக் கல்லூரி) போதனாசிரியராகக் கடமையாற்ற அழைக்கப்பட்டார். அங்கு இவர் ஓய்வு பெறும்வரை கடமையாற்றினார். இடைப்பட்ட காலத்தில் சுமார் 2 வருடங்கள் கிழக்கிலங்கையில் உள்ள சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் கடமை ஆற்றியும் உள்ளார்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு சுருக்கெழுத்துத் தட்டச்சு கலைகளைத் திறம்பட போதித்ததன் காரணமாக அவர்களில் பலர் பாராளுமன்ற அறிக்கையாளர்களாகவும், சுருக்கெழுத்தாளர்களாகவும், தட்டெழுத்தாளர்களாகவும், சுருக்கெழுத்து-தட்டச்சுப் போதனா ஆசிரியர்களாகவும் மற்றும் பல உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் உள்ளார்கள். இதற்கு அவரது தன்னலம் கருதாத சேவையே காரணமாகும். இவர் சேவை மனப்பான்மை, விடாமுயற்சி, உற்சாகம் ஆகிய நற்குணங்களை ஒருங்கே அமையப் பெற்றவர்.

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக அவரது மாணவர்களும், நலன் விரும்பிகளும் ஒன்றுகூடி 29–3–76ல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வெற்றி விழா ஒன்றைக் கொண்டாடியமையை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறக்காது. இந்த விழாவின் போது மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அந்த மலருக்கு இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத் தலைவர் கலாநிதி க. கைலாசபதி, பிரபல தமிழக எழுத்தாளர் அகிலன், தஞ்சாவூர் சுவாமி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. என். மோகன், தமிழ்நாடு சட்ட மன்ற அறிக்கையாளர் திரு. ஜி. எஸ். அனந்த நாரயணன் உட்படப் பல அறிஞர்கள் ஆசிச்செய்தி வழங்கியது, ஆசிரியர் அவர்களின் சுருக்கெழுத்துப் பாண்டித்தியத்தையே எடுத்துக் காட்டுகிறது.

வட்டுக்கோட்டையை (அராலி) வதிவிடமாகக் கொண்ட ஆசிரியரின் வாழ்க்கைத் துணைவியார் மகாலட்சுமி அம்மையாரும் சுருக்கெழுத்துக் கலையில் ஓர் வல்லவராவார். இருவரும் மாணவர்களுக்கு இலகுவான முறையில் சுருக்கெழுத்தைப் போதிக்கத் தக்க வகையில் சுருக்கெழுத்து நூல்களையும் வெளியிட்டு சுருக்கெழுத்துக் கலை வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். இதன் காரணமாக ஆசிரியர் அவர்கள் ஈழத்து தமிழ் சுருக்கெழுத்து தந்தை என அழைக்கப்பட்டார்.

இவர் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் திருநெல்வேலி சந்தை மேல்மாடியில் சில காலம் தனிப்பட்ட முறையில் எவ்வித விளம்பரமும் இன்றி மாணவர்களுக்குச் சுருக்கெழுத்தைப் போதித்து வந்தார்.

அவர் தன்னிடம் படிக்காத வேற்று முறைச் சுருக்கெழுத்தைப் போதிக்கும் இக்கட்டுரையாளர் போன்றவர்களுக்கும் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கியமை அவரது நல்லெண்ணத்தையே எடுத்துக் காட்டுகிறது.

அவர் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 1989 மே. 13ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

எனினும் இவரது சேவையை தமிழ் கூறும் நல்லுலகம் சுருக்கெழுத்துக்கலை ஆர்வலர்களும் என்றும் நினைவு கூர்வார்கள்.

க. வ. சிவச்சந்திரதேவன்,
செயலாளர்,
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.

## இராமலிங்கத்தாரின் இறுதி நாட்களில்...

இலங்கையின் சுருக்கெழுத்துத் தந்தை எனப் பெயர் பெற்ற சி. இராமலிங்கம் இன்றில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சி வரலாற்றிலே அவருக்கு நிச்சயம் இடம் உண்டு.

அவருக்கு இலங்கை, இந்தியத் தமிழறிஞர்களோடு நீண்டகாலத் தொடர்புகள் இருந்தன. குறிப்பாக தமிழகத் தலைவர்கள், தி. மு. க அரசியல் தலைவர்களோடு நெருங்கிப் பழகியிருந்தார்.

இலங்கை விஷயங்களின் போது அத்தலைவர்கள் இராமலிங்கனாரைக் கண்டு பேசத் தவறியதில்லை. இவரும் அடிக்கடி தமிழகம் சென்று தமிழ் வளர்ச்சிக்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

அண்ணாத்துரை சுகவீனம் என்று கேள்விப்பட்டதும், நேரே போய்ப்பார்த்து ஆறுதல் கூறுமளவிற்கு அவர் தொடர்புகள் இருந்தன.

அவர் சென்றாண்டு ஏப்பிரலில் சென்னைக்கு வந்தபோது என்னோடு தங்கியிருந்தார். அவரது சுருக்கெழுத்து நூல் ரோனியோப் பிரதியாகவே இருந்து வந்தது.

அதனைப் புதுப்பித்து, அழகாக அச்சிட்டு வெளியிடும் நோக்கோடு வந்திருந்தார்.

அவருக்கு வேண்டிய ஒத்துழைப்புக் கொடுப்பதில் நானும் ஈடுபட்டேன். சில தமிழறிஞர்களைச் சந்தித்து ஆலோசனைகள் பெறப்பட்டன. அச்சகங்கள் சிலவற்றிற்குச் சென்று வெளியிடுவதற்கான முன் முயற்சிகளும் செய்யப்பட்டன.

இந்தவேளை, திடீரென அவர் சுகயீனமடைந்தார். மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று அவரை யாழ்ப்பாணம் உடன் அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விரைவில் குணமடைந்து விடுவார் என்ற செய்தி கிடைக்கும் என எண்ணிக் கொண்டிருந்த வேளையில் 13–5–90ல் மரணமடைந்தார் என்ற செய்தியே கிடைத்தது.

அவரது நூல் வெளியீட்டு முயற்சி இடையில் தடைப்பட்டது துர்ப்பாக்கியமானதே!

மு. குணரத்தினம்
அராலி.

## காற்றில்கலந்த ஒலி

அன்றிருந்த ஆசானே இன்று இல்லை
அவனியிலே யார் இருப்பார் என்று எண்ணி
சென்றனையோ செயலிழந்த நிலையில் நின்று
செவ்வானம் பூரிக்கச் சென்று விட்டாய்

மணி மழையாய் நீ இறைக்கும் சொல்லாட்சிக்கு
மண்டலத்தில் யார் நிகராய் நிற்பார் என்று
துணிவுடனே செப்பிவந்த கலைப்பேரனை
துன்பமெல்லாம் உன்மனையாள் சுமைந்து நிற்க

தங்கி விட்டாய் தமிழ் கடலின் அலையினுள்ளே
தவழ்ந்து வரும் புன் சிரிப்பை அடக்கி விட்டாய்
காலமெல்லாம் காற்றில் கலந்த ஒலி
காலனிடம் எப்படிச் சென்றதையா

செல்வி நா. வேலுப்பிள்ளை

## இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரியாகக் கடமையாற்றிய ஜனாப் எஸ். அபுசாலி திருமலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## அடையாள அட்டை

புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்த குணரத்தினம் கவிதா என்பவருடைய (இல- 726930546 V) தேசிய அடையாள அட்டை விடுதலைப் புலிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டி சுதுமலைச் சந்தியிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மானிப்பாய் பிரதேச காரியாலயத்தில் அதன் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். (135)

## தமிழ்த்தின விழா

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி தமிழ்த்தின விழா நாளை 14ம் திகதி திங்கட்கிழமை காலை கல்லூரி அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் கல்விக் கோட்ட அதிகாரி திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (81)

## ஈழநாடு வாரமலர்

20 - 5 - 90

ஈழநாடு வாரமலர் புதுப்பொலிவுடனும் மற்றும் பல புதிய அம்சங்களுடனும் 20–5–90 முதல் வெளிவரும். வாசகர்களிடமிருந்து கட்டுரைகள், கவிதைகள் சிறுகதைகள் மற்றும் மங்கையர் மஞ்சரி, மாணவர் மன்றம், ஞாயிறு மஞ்சரிக்கான விடயங்களை எதிர்பார்க்கின்றோம்.

வாரமலர் விலை ரூபா 4/-

## விசேட தாதிப் பயிற்சி வகுப்பு

விசேட தாதிப் பயிற்சி வகுப்பு ஒரு மாத காலம் நடைபெற இருப்பதனால் பயிற்சி பெற விரும்பிய ஆண், பெண் இருபாலாரும் 8-ம் வகுப்புக்கு மேற் படித்தவர்கள் கீழ்க்காணும் நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு விண்ணப்பிக்கலாம். நிர்வாகி,

**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(ஏ-743)

## அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு முடிவு

சங்கானை

## JUPITER SPORTS CLUB

வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில்கள் பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

1-ம் பரிசு 2 5 0 4
2-ம் பரிசு 2 8 7 6
3-ம் பரிசு 1 1 0 6

மேலும் 10 ஆறுதல் பரிசில்கள் பெறும் இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 513 | 2. | 2057 |
| 3. | 1581 | 4. | 264 |
| 5. | 2516 | 6. | 1027 |
| 7. | 1159 | 8. | 2279 |
| 9. | 1332 | 10. | 1637 |

முக்கிய குறிப்பு

20–5–90க்கு முன் உரிய அதிர்ஷ்டலாபச் சீட்டுடன் மட்டும் நேரில் வந்து பரிசில்களை பெற்றுக்கொள்ளவும். அதிர்ஷ்ட லாபச்சீட்டு இன்றி எக்காரணம் கொண்டும் பரிசில்கள் வழங்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின் பரிசில்கள் வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்

க. சத்தியலிங்கம்
செயலாளர்
Jupiter Sports Club

(சி- 3850)

விவசாயத் திணைக்களம் [ வடக்கு - கிழக்கு ]

## விவசாயக் கல்லூரி,

வவுனியா.

## விவசாய டிப்ளோமா பயிற்சி

[ 1990 / 92 ]

## நெறிக்கான விண்ணப்பம்

1990 / 92 கல்வியாண்டிற்கான இருவருட விவசாய டிப்ளோமா பயிற்சிநெறிக்கு தகைமையுடைய விண்ணப்பத்தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :
   (1) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் ஆறு பாடங்களில் ஏதாவது மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல்.
   (2) 1990-ம் ஆண்டு புரட்டாதி 1-ந் திகதி 18 — 25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவங்களை அதிபர், விவசாயக் கல்லூரி, வவுனியா இடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபாலில் 25 - 06 - 1990 அல்லது அதற்கு முன்பாக விவசாயப் பணிப்பாளர், (வடக்கு - கிழக்கு), 42, கஸ்கிசன் வீதி, திருகோணமலைக்கு அனுப்பப்பட வேண்டும்.

விவசாயப் பணிப்பாளர் ( வடக்கு - கிழக்கு ),
விவசாயத் திணைக்களம்,
42, கஸ்கிசன் வீதி, திருகோணமலை.

திகதி : 03 - 05 - 1990. (ஏ-742)

# அரசுடன் பேசும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ்..குழுவினர்

(கொழும்பு)

அரசுடன் பேச்சுக்களை நடாத்தும் ஈ. பி. ஆர். எல். எவ் வினரது பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுக்கள் தாம் முன் வைத்த 19 அம்சகோரிக்கையின் அடிப்படையில் 15ம் திகதி செவ்வாய்கிழமை நடைபெறுமென யாழ். மாவட்ட எம். பி. திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இக்குழுவில் திரு. யோகசங்கரி, திரு. பிரேமச்சந்திரன், மாகாணசபை உறுப்பினர்கள் ஜனுப் அபுயூசுப், திரு. கிருபாகரன் மற்றும் திரு. ராஜரங்கேஸ்வரன்ஆகியோரும் இடம் பெறுவர்.

இதேவேளை தமது 19 அம்ச கோரிக்கை தொடர்பாக அரசு இணக்கம் எதற்கும் வரத்தவறின் மாகாணசபைக் கூட்டம் இலங்கையின் எந்தப் பகுதியிலும் நடைபெறுவதற்கானசாத்தியம் இல்லை யென் றும்திரு. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

### இந்தியாவுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான அடிப்படையில் இப்பேச்சுக்கள் அமையுமென்றும் இது விடயத்தில் இலங்கை அரசுடன் ஓர் புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தங்கியிருக்கும் ஒரு லட்சம் இந்திய பிரஜைகளும் விரைவில் இந்தியா அனுப்பப்படுவார்களென்றும் தொடர்ந்தும் இவர்கள் இங்கு தங்க இலங்கை ஒருபோதும் அனுமதியாதென்றும் பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர் திரு.ரஞ்சன் விஜயரட்ன அண்மையில் தெரிவித்ததையடுத்து பெரும் சிக்கல் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை இப்பிரச்னை குறித்து இந்தியாவுடன் பேச்சு நடாத்த எந்தவித அழைப்பும் இந்தியாவிற்கு விடுவிக்கப்படவில்லையென இலங்கைக்கான இந்திய பிரதித் தூதர் திரு. பி. ராத் தெரிவித்துள்ளார். (சி)

### பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளருக்கு அவசர மகஜர்களை அனுப்பியுள்ளன.

இப்பரீட்சை யூன் மாதம் 23ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது,

### 'றே'விற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் முதல்வர் திரு. கருணாநிதி பிரதமர் சிங்குக்கு அவசரவேண்டுகோளும் அண்மையில் விடுத்திருந்தார். இதையடுத்து பிரதமர் விரைவில் முக்கிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

### இரவு நேர

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

மாலை 7-00 மணிக்குப் பின் சேவையிலீடுபடும் தனியார் போக்குவரத்து பஸ்களே இவ்வாறு அதிக கட்டணத்தை வசூலிக்க முடியும். இவ்வாறு அதிக கட்டத்தை பெறும் பஸ்கள் இரவு பத்துமணி வரை சேவையிலீடுபட வேண்டும்.

இரவு நேரத்தில் போக்குவரத்து மிகக்குறைவாக இருப்பதால் தனியார் போக்குவரத்து பஸ்களை அதிகளவில் சேவையிலீடுபடுத்தவே இவ்வாறு அதிக கட்டண வசூல் திட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது. (சி)

### பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முனையில் கடத்தப்பட்டனர். இவர்களது மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையிலிருந்ததையடுத்து பொலிஸார் பலத்த தேடுதலில் ஈடுபட்டனர்.

எனினும் இவர்கள் இருவரும் 48 மணி நேரத்தின்பின் கண்கள் கட்டப்பட்ட நிலையில் பல்கலைக் கழக வளவினுள் வெவ்வேறிடங்களில் கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டனர். கடத்தலுக்கான காரணம் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. பொலிஸார் தொடர்ந்தும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (சி)


எமது நேற்றைய
புதிய வெளியீடுகள்

1. ★ ராஜசேகர் ★ விஜயசாந்தி
"பட்டிக்காட்டு டாக்டரம்மா"
[ ஒறிஜினல் ]

2. ★ A. V. M. ராஜன் ★ விஜயலலிதா
"பந்தயம்"
[ ஒறிஜினல் ]

3. ★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா ★ அசோகன்
"ஒளிவிளக்கு"
[ ஒறிஜினல் ]

4. ★ காந்தாராவ் ★ தேவிகா ★ நாகேஷ்
"சுகுணசுந்தரி"
[ ஒறிஜினல் ]

KVC குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(ஏ-744)


# தொண்டமான் எதிர்காலம் கேள்விக் குறி

(கொழும்பு)

இந்திய வம்சாவழியினரை திருப்பி அனுப்பும் விவகாரம் அமைச்சர் திரு.எஸ்.தொண்டமானின் எதிர்கால அரசியலை பெரும் கேள்விக்குறியாக்கலாமென பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் இ. தொ. கா. சார்பில் எவரும் வெற்றிபெறுததும் திரு. தொண்டமான் தேசிய பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

ஒரு லட்சம் தோட்டத் தொழிலாளர்களும் திருப்பி அனுப்பப்பட்டால் திரு. தொண்டமானின் அரசியல் செல்வாக்குபெருமளவு சரிந்து விடும் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

# இந்தியா - பாகிஸ்தான் படைபலம்

| | | இந்தியா | பாகிஸ்தான் |
|---|---|---|---|
| 1. | இராணுவப் பிரிவுகள் | 10 | 9 |
| 2. | காலால் படைப் பிரிவுகள் | 31 | 18 |
| 3. | கவச வண்டிப்படைப் பிரிவுகள் | 2 | 2 |
| 4. | இயந்திரமயப் படை பிரிவுகள் | 1 | — |
| 5. | சுதந்திரப்படை அணி | 17 | 14 |
| 6. | டாங்கிகள் | 2600 | 2300 |
| 7. | விமானப் படையணி | 37 | 24 |
| 8. | போர் விமானங்கள் | 700 | 400 |
| 9. | விமானத்தளப் போர்க் கப்பல்கள் | 2 | — |
| 10. | நீர் மூழ்கிக் கப்பல்கள் | 15 | 6 |
| 11. | நாசகாரிக் கப்பல்கள் | 5 | 8 |
| 12. | விரைவு போர்க்கப்பல்கள் | 11 | 10 |

### இந்தியப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ட் இரண்டாம் திகதி வல்வையில் நடைபெற்ற படுகொலைகளை என்னுல் மறக்க முடியாது. இது மிகவும் கொடுமைமிக்கது. கண்டிக்கப்படவேண்டியது. அகிம்சா மூர்த்தி காந்தி பிறந்த நாடான இந்தியா இவ்வாறான கொடூரக் கொலைகளை செய்ததன் மூலம் உலக நாடுகளிடையே பெரும் களங்கத்தை பெற்றுக்கொண்டது

அப்பாவி மக்களின் உயிர்களைப் பறித்த இநதிய இராணுவம்சடலங்களையும். காயங்களுடன் குறை உயிருடன் துடித்தவர்களை மீட்பதற்கு இரு நாட்கள்வரை எனக்கு அனுமதியளிக்காததோடு பல உயிர்களை உயிருடன் அரை குறை நிலையிலும் எரித்து சீரழித்துள்ளது. இவை மூன்றும் நாள் நாற்றமெடுத்தும் அழுகிய நிலையிலுமாக நான் நேரில் கண்ட சம்பவங்களை என்னுல் வாழ்க்கையில் மறக்கமுடியாது.

கேள்வி: வைத்தியசாலையில் ஊழியம் செய்யும் காலங்களில் போராளிகளா பொதுமக்களா? அதிகம் பாதிப்படைந்தார்கள்?

பதில்: போராளிகளை (புலிகளை) நான் வைத்தியசாலையில் காணவில்லை. பெருந்தொகையான பொதுமக்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களையுமே என்னுல் காணமுடிந்தது.

கேள்வி: போராளிகளின் இந்தப் போராட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: போராளிகள் என்று ஏன் பதம் பிரிக்கின்றீர்கள். தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் என்று சொல்லுங்கள்! அவர்கள் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகப்போராடுகின்றார்கள் அது நியாயமானதே.

கேள்வி: தாங்கள் எதற்காகப் பிரான்ஸ் திரும்புகின்றீர்கள்!

பதில்: எனது சேவைக் காலம் முடிந்துவிட்டது அதனுல் நான் தாயகம் செல்கின்றேன்.

கேள்வி: மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை பற்றி ஏதும் தெரிவிக்க முடியுமா?

பதில்: கொழும்பு போன்று இங்கு மருத்துவ வசதிகள் மிகக்குறைவு. தொழிலாளர், டாக்டர்கள் மிகக் குறைவு இவைகளுடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டும். இது விடயமாகஎனதுசேவைக் காலத்தில் பலவகைகளிலும் முயற்சி எடுத்து ஓரளவிற்கு நிவர்த்தி செய்துள்ளேன்.

### யாருடையது?

மானிப்பாய் வில்லியம்மேதர் ஒழுங்கையைச் சேர்ந்த ஒரு பெண்ணின் அடையாள அட்டையும், சிறுதொகை பணமும் மருந்து குளிசைகளும், யாழ்ப்பாணத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 6ம் தேதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜனுப் எம். ஐ. பதுார்தீன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

### டாக்டர் ஜாக்குலின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது,

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசார வைபவத்தில் செல்வி ஜாக்குலினுக்கு வைத்தியசாலை ஊழியர்கள் தங்க மோதிரங்கள், நடராஜர்சிலை, பூச்செண்டுகள் வழங்கி கௌரவித்தனர்.

செல்வி ஜாக்குலின் இங்கு சேவையை முடித்துக்கொண்டு எதிர்வரும் 17ம் திகதி வியாழக்கிழமை நாடு திரும்புகிறார். கடந்த இரு வருடத்தில் இந்தியப் படையினரின் தாக்குதலுக்கிலக்காகிய ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கும், பல போராளிகளுக்கும் இவர் வழங்கிய சேவை புபலருக்கு இரத்ததானம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது (51)

### முள்ளிக்குளத்தில் வீரவிழா

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மன்னார் முன்னாள் தளபதி லெப். கேர்ணல் ராதா, உட்பட இப்பகுதியில் வீரமரணமடைந்த பதினொரு விடுதலைப் புலிகளின் நினைவாக இம்மாதம் 19ம், 20ம் திகதிகளில் முள்ளிக்குளத்தில் வீரவிழா ஒன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவினையொட்டி விளையாட்டுப் போட்டிகள் மலர் வெளியீடு, நினைவுத் தூபிகள் திறப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் முள்ளிக்குளம் மக்களால் செய்யப்பட்டு வருகிறது.

### சான்றிதழ் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரியில் ஐந்துநாள் உடற்கல்வி - உடற்பயிற்சிக்கான வதிவிடக்கருத்தரங்கிலும் செயவமர்விலும் பங்குகொண்ட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இன்று ஞாயிறு சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர் திரு. இராசதுரை தலைமையில் வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வீ. இராசையாவினுல் இச்சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

### 800 கோடி

(1ம் பக்கத தொடர்ச்சி)

ஆகிய இடங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து இத்திட்டத்தை அமுல்செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இக்குழு கொழும்பு சென்றதும் இதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும்.

இதற்கிடையில் வடக்குப் பகுதிக்கு துணுக்காயிலும் கிழக்குப் பகுதிக்கு புல்மோட்டையிலும் அமைந்துள்ள தொலைபேசி பரிவர்த்தனை இணைப்பு நிலயங்களை புனருத்தாரணம் செய்வதன் மூலம் யாழ்ப்பாணம் திருமலைப் பகுதிகளுக்கு புதிதாக 500 தொலைபேசி இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இக்குழுவுடன் இணைந்து சென்ற வடக்கு, கிழக்கு தொலைத்தொடர்பு சுப்பிரிண்டென் திரு. எஸ். கனகசூரியர் தெரிவித்துள்ளார். [அ]

### ஜே. வி. பி.யின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஜே. வி. பி. யுடன் இனி எந்த சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தைநடத்தப்படும்என்ற பேச்சுகே இடமில்லையென அண்மைக்காலங்களில் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன கூறிவந்தபோதிலும் இப்பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

# "இதமான மனிதனை" காண்பது அரிதாம்!

## ஜப்பானில் பெண்கள் கவலை!

[ டோக்கியோ ]

''இதமான மனிதனை'' இன்று காண்பது மிக அரிதாக இருப்பதனுலேயே தாம் திருமணம் புரியாமல் கன்னிப் பெண்களாக காலம் கழித்து வரவேண்டியுள்ளது என ஜப்பானிய இளம் பெண்கள் கவலையடைந்துள்ளனர்.

அழகும், அறிவும், இதம்பதமாக உரையாடும் பாங்கும், நேர்மையும் நிறைய பணம் சம்பாதிக்கும் தகுதியும் உடையவரே இந்த ''இதமான மனிதனும்''

ஜப்பானிலுள்ள திருமணம் முடித்து வைக்கும் 'அல்றமன்' என்னும் முகவர் நிலயம் ஒன்று 500 கன்னிப்பெண்களை சந்தித்து, நடாத்திய அபிப்பிராய மதிப்பீட்டின்படி 'ஐந்து பெண்களில் ஒருவர்கூட இத்தகைய இதமான மனிதனை இன்றுவரை சந்திக்கவில்லை என அலுத்துக்கொண்டனராம். [அ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 1 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.